# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 28 ஞாயிற்றுக்கிழமை (11-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:166


## அமைச்சர்களின் பொறுப்புக்களைப் பிடுங்கும்

# ஜனாதிபதியின் தன்னிச்சை முடிவால்

# தெற்கு அரசியலில் பெரும் குழப்பம்!

## பதிலடிக்குத் தயாராகிறது அரசுத் தரப்பு



கொழும்பு,மே11

**பிரதமர் ரணிலின் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களிடமிருந்து - பிரதமரின் ஆலோசனையோ, இணக்கமோ இன்றி - பொறுப்புக்களைத் தன்னிச்சையாகப் பிடுங்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முயற்சியினால் தெற்கில் பெரும் அரசியல் பூகம்பம் வெடிக்கும் சூழ்நிலை தோன்றியிருக்கின்றது.**



**ஜனாதிபதியின் முயற்சிக்கு பதிலடி கொடுத்து, தமது அரசின் ஸ்திரத் தன்மையை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரச உயர்பீடம் மந்திராலோசனை நடத்தி வருகின்றது.**

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கு கீழ் உள்ள அபிவிருத்தி லொத்தர் சபையைத் தன்னிச்சையாக ஜனாதிபதி பொறுப்பேற்க எடுத்த முடிவுக்கு எதிராகவே அரசுத் தரப்பு போர்க்கொடி உயர்த்தியுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையை தனக்குக் கீழ் கொண்டு வரும் விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கான உத்தரவு ஒன்றை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் விடுத்தார்.

இந்த வர்த்தமானி அறிவித்தலை அரச அச்சகத்தில் அச்சிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், நேற்றுமுன்தினம் இரவு அதற்கு எதிராக அங்கு நடந்த ஆர்ப்பாட்டம் காரணமாக அந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியானதா அல்லது வெளியாகவில்லையா என்பது குறித்து உறுதியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே. முன்னணி வெற்றியீட்டியதை அடுத்து - சில இழுபறிகளுக்குப் பின்னர் - வெற்றியீட்டிய அந்த அணியின் தலைவரான ரணிலே பிரதமராகவும், அவர் சிபார்சு செய்தோரை அமைச்சர்களாகவும் நியமிக்க ஜனாதிபதி இணங்கினார்.

அவ்வப்போது புதிய அமைச்சர்களை நியமிப்பதில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள், இழுபறிகள், காலதாமதங்கள் ஏற்பட்டபோதிலும் பிரதமரின் ஆலோசனைப்படியே அமைச்சர்களும் அவர்களுக்கான பொறுப்புக்களும் ஒதுக்கப்பட்டு வந்தன

ஆனால், தற்போதைய அபிவிருத்தி லொத்தர் சபையை பிரதமரின் கலந்தாலோசனை, இணக்கமின்றி தன்னிச்சையாகத் தனது பொறுப்பின்கீழ் கொண்டுவர ஜனாதிபதி முயன்றிருக்கின்றார்.

இந்தப் போக்கு அனுமதிக்கப்பட்டு செயலுருப் பெறுமானால் இந்த முன்மாதிரியைச் சட்டரீதியாகக் கொண்டு பிரதமரின் கலந்தாலோசனை இன்றி தான் விரும்பியபடி அமைச்சர்களை யும் அவர்களின் பொறுப்புக்களையும் அவ்வப்போது மாற்றி நியமிக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி செய்வதைத் தடுத்துநிறுத்த முடியாமல் போய்விடும் என அரசுத்தரப்பும் கருதுகிறது.

அதனால் ஜனாதிபதியின் தன்னிச்சைப் போக்கை தடுத்து நிறுத்துவது தொடர்பாகவும், ஜனாதிபதியின் நடவடிக்கையால் எழுந்துள்ள அரசியல் குழப்பம் குறித்து ஆராய்வதற்காகவும் விசேட அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் மாநாட்டில் அரசு பங்குபற்றுவதும் சந்தேகமே!

### அரசமைப்பு நெருக்கடி காரணம் என்கிறார் பிரதமர்

கொழும்பு,மே11

நாட்டில் தற்சமயம் உருவாகியுள்ள அரசமைப்பு நெருக்கடி நிலைக்கு தீர்வு காணப்படாவிட்டால் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டுக்கு இலங்கை பங்குபற்ற முடியாத நிலை ஏற்படலாம்.

- இப்படிக் கூறியுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தியுள்ள விடுதலைப் புலிகள் ஜப்பானில் நடக்கவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவார்களா என்ற கேள்வி தற்சமயம் எழுந்துள்ளது.

இந்நிலையில், தெற்கில் உருவாக்கப்பட்டுள்ள அரசமைப்பு நெருக்கடி, அரசும் இந்த மாநாட்டில் பங்குபற்றுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அரசமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தி, நாட்டைக் குழப்பி அரசியல் லாபம் தேட சில சக்திகள் முனைந்து நிற்கின்றன - என்றார் அவர். (ம-3)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் 8,000 இராணுவத்தினர் தப்பி ஓட்டம்

கொழும்பு,மே.11

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த பின்னர் இராணுவத்தில் இருந்து 8 ஆயிரம் பேர் தப்பி ஓடியுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு - கிழக்கில் பணி புரியும் படையினருக்கு போதிய அடிப்படை வசதிகள் அரசால் செய்து கொடுக்கப்படாமையே அவர்கள் தப்பி ஓடுவதற்கு மூலகாரணம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இக்கால இடைவெளியில் புதிதாக இராணுவத்துக்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் ஐந்நூறு பேரை மட்டுமே புதிதாக சேவையில் சேர்க்க முடிந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ம-3)

## நம்பியாரின் அறிக்கை பக்கச் சார்பற்றதாம்

### டக்ளஸ் கூறுகிறார்

லண்டன்,மே.11

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியார் கையளித்துள்ள அறிக்கை பக்கச்சார்பற்றது என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அறிக்கை பற்றி உத்தியோகபூர்வமாக அறியாவிட்டாலும் பத்திரிகைச் செய்திகள் மற்றும் அறிந்த அளவில் பக்கச் சார்பில்லாத ஒரு நடுநிலைமை வாய்ந்ததாகத்தான் நான் அதனைக் கருதுகின்றேன்.

அரச படைகளுக்குப் புலிகள் மீதும், புலிகளுக்கு அரச படைகள் மீதும் பரஸ்பர சந்தேகம் நிலவி வருவதால் இச்சந்தேகத்தினை வைத்துத தான் இப்பிரச்சினையை அணுகவேண்டுமென அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பேச்சை இடைநிறுத்தியமைக்கான காரணம் பற்றி

# அரச தரப்புக் குழுவுக்கு சொல்ஹெய்ம் விளக்கம்

கொழும்பு,மே.11

பேச்சுக்களை இடை நிறுத்தியமைக்காக விடுதலைப் புலிகள் தெரிவித்த காரணங்களை அரசுத் தரப்பிடம் நோர்வே சமாதானக் குழு விளக்கிக் கூறியுள்ளது.

நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ரீசர் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியிருந்தனர். அவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் அரசுத் தரப்புடன் கலந்துரையாடியுள்ளனர்.

இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் அரசத் தரப்புடன் அவர்கள் ஆராய்ந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் இச்சந்திப்பில் அரசுத் தரப்பில் பங்குபற்றினர்.

பேச்சை இடைநிறுத்தியமைக்காக விடுதலைப் புலிகள் தெரிவித்த காரணங்களை நோர்வே குழு அரசுத் தரப்புக்கு எடுத்துக் கூறியது. அந்தக் காரணங்களைச் சீர்படுத்துவதன்மூலம் புலிகளை மீண்டும் பேச்சுக்கு கொண்டுவர சந்தர்ப்பம் உள்ளது என்று நோர்வே குழு சுட்டிக்காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பிரதமர் பதில் அளிக்கையில் கூறியதாவது:-

உலக வங்கியின் உதவி கிடைத்ததும் மிக விரைவில் மனிதாபிமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

நாட்டின் பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படாத வகையில் பேச்சில் முன்வைக்கப்பட்ட சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் - என்றார். (ம-3-12)

## ஆயுதக் கோஷ்டியின் தாக்குதலையடுத்து

# அரச அச்சகத்துக்கு நேற்று 'சீல்' வைப்பு!

கொழும்பு,மே11

பொரளையில் உள்ள அரச அச்சகத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கைகலப்புச் சம்பவங்களை அடுத்து அச்சகம் 'சீல்' வைக்கப்பட்டு கடும் பொலீஸ் காவல் போடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் நிர்வாகத்தை தன்னிச்சையாக ஜனாதிபதி பொறுப்பேற்றமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரச அச்சகத்தில் நேற்றுமுன்தினம் அச்சிட ஏற்பாடாகியிருந்தது.

அன்றிரவு வாள்கள், பொல்லுகள் சகிதம் அச்சகத்தினுள் நுழைந்த கோஷ்டி ஒன்று அங்கிருந்தவர்களை வெட்டியும் இயந்திரங்களைச் சேதமாக்கியும் அட்டகாசம் புரிந்துள்ளது.

இதைக் கேட்டு அங்கு பொலீஸார் விரைந்ததும், அந்தக் குழுவினர் தப்பி ஓடிவிட்டனர். குழுவினர் விட்டுச் சென்ற வாள்கள், பொல்லுகளைக் கைப்பற்றியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் அச்சகத்துக்கு பலத்த பொலீஸ் காவல் போடப்பட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி முடித்த போராளிகளுக்கு கௌரவம்

திருகோணமலை,மே11

திருகோணமலை, சம்பூரில் உள்ள பயிற்சிக் கல்லூரியில் இருந்து வெளியேறிய போராளிகளுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கும் வைபவம் நேற்று இடம்பெற்றது.

இக்கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறிய இளநிலை அதிகாரிகள் தரத்தில் உள்ள 50 பேருக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாற்று அரசு அமைப்பது பற்றி பொ.ஐ.முன்னணி ஆராய்கிறது

கொழும்பு,மே11

நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காக மாற்று அரசு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆராய்ந்துவருகின்றது.

இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பது என்று அந்த முன்னணி முடிவு செய்துள்ளது.

மாற்று அரசு அமைப்பதற்கான வாய்ப்புக்குறித்து ஆராய குழு ஒன்றை அமைப்பது என்றும் -

அக்குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர மற்றும் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோரை இடம்பெறச்செய்வது எனவும் - முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

24 MAY 2003

# பிராந்திய இந்து மாநாடு நேற்று சிறப்புற நிறைவு

யாழ்ப்பாணம்,மே11

இந்துசமய கலாசார அலுவல்கள அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் 2 ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய யாழ். பிராந்திய மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் சிறப்புற நடைபெற்றன.

காலை, மாலை என இரு அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெற்றன.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற அமர்வில் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து 'இந்துமகளிர் அன்றும இன்றும்' என்ற தலைப்பில் மகளிர் அரங்கம் இடம்பெற்றது.

'மகளிர் வாழ்வியலில் வழிபாடு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், 'மகளிர் வாழ்வியலில சமயம்' என்ற தலைப்பில் மருதனார் மடம் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும், 'மகளிர் வாழ்வியலில் மதம்' என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியமும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

திருமதி கோகிலா மகேந்திரனின சார்பாக அவரது கட்டுரையினை திருமதி ரதி சோதிலிங்கம் சமர்ப்பித்தார்.

இவற்றைத் தொடர்ந்து யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஜெயமலர் தியாகலிங்கம், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் செலவி செல்வ அம்பிகை நடராஜா, மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா, யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல்துறை விரிவுரையாளர் செல்வி பகீரதி ஜீவேஸ்வரா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

மாலை அமர்வுக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை வகித்தார். அதில், தமிழக அறிஞர்களான பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவகத்தைச் சேர்ந்த சுகதசன், மலேசியா பல்கலைக்கழக இந்தியவியல துறைத தலைவர் கலாநிதி சுகுமரன், சென்னை பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த கலாநிதி வா.மு. சே.ஆண்டவர் ஆகியோர சிறப்புரையாற்றினர்.

சுவீடன் நாட்டின் உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சல்க், ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த பேராசிரியர் ஆனட் வில்க்கே ஆகியோரும் உரையாற்றினார்கள். அத்துடன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், பட்டப் பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோரது உரைகளும் இடம்பெற்றன. யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் வாழ்த்துரை நிகழ்த்தினார்.

யாழ். பிராந்திய இந்து மாநாட்டை முன்னிட்டு யாழ். மாநகரசபை இந்து விவகாரக் குழுவினால் நினைவுமலர் ஒன்று வெளியிடப்பட்டது.

இந்த நினைவு மலரின் முதற்பிரதியை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கத்திடம் இருந்து பெற்றுக்கொண்டார். தொடர்ந்து இசை, நடன, நாடக நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-4)



இந்து மாநாட்டில் நிறைவு நாள் நிகழ்வில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த உப்சாலா பல்கலைக்கழக பேராசிரியர் பீற்றர் சல்க் உரையாற்றுகிறார்.



சென்னை பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த கலாநிதி வா.மு.சே. ஆண்டவர் உரைநிகழ்த்துகிறார்.



ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அனட் வில்க்கு உரையாற்றுகிறார். (படங்கள்:அற்புதன்)

# சமாதானம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே11

இலங்கையில் நீடிக்கும் சமாதானத்துக்கான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுவின் ஏற்பாட்டில் சமாதானம் குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணி முதல் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இந்தக் குழுவின் 12 உறுப்பினர்கள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று சமாதானத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் குறித்து மக்களுடன் கலந்துரையாடி வருகினறனர்.

தெருவில் சமாதானத்தைப் பகிர்தல் என்ற நோக்குடன் வருகைதந்த இக்குழுவினர், விடுதலைப் புலிகளின அரசியல் துறையினர், சமூகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரமுகர்கள் ஆகியோருடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். (ம-3)

# தம்பதியரைத் துரத்திய திருட்டுக் குழுவினர்

## காப்பாற்றமுயன்ற இளைஞருக்கு வாள்வெட்டு

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு தம்பதியரிடம் இருந்து நகைகளை அபகரிக்க முயற்சிசெய்த சமயம் பொதுமக்களால பிடிக்கப்பட்ட நபரை யாழ் ஆஸ்பத்திரியில் பொலீஸ் பாதுகாப்புடன் சிகிச்சைக்கு உட்படுத்துமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை நோக்கி நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தம்பதியரை மூவர்கொண்ட திருட்டுக்குழு கலைத்துச் சென்றுள்ளது. வேகமாகச் சென்ற அந்தத் தம்பதியர் பொதுமக்கள் கூடிநின்ற இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி அபயக் குரல் எழுப்பினர்.

அங்கு கூடிநின்ற இளைஞர்கள் சிலர் அந்தத் திருட்டுக் கும்பலைக் கலைத்துச்சென்றனர். அவர்களில் ஒருவரை திருட்டுக் குழுவினர் வாளினால வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

எனினும், திருட்டுக்குழுவை தொடர்ந்து துரத்திச்சென்ற மற்றைய இளைஞர்கள் அவர்களில் ஒருவரை மடக்கிப்பிடித்து நையப்புடைத்த பினனர் மானிப்பாய் பொலீஸில் ஒப்படைத்தனர்.

அவரைப் பொலீஸார் நேற்று மல்லாகம் நீதிவான் முன் ஆஜர் செய்தனர்.

சுண்டுக்குழியைச் சேர்ந்த டிலான என்ற அந்த நபரை விளக்கமறியலில வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார.

காயமடைந்த நிலையில் உள்ள அந்த நபரை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும்படியும் -

அவருக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கும் படியும் -

நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டிருந்த இவர், கடந்த மாதமே பிணையில் சென்றிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3-4-10-160)

# அன்னைக்கு நிகர் உண்டோ!

**இன்று உலக அன்னையர் தினம். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது. 'Das Beste' என்ற ஜேர்மன் மொழிச் சஞ்சிகையில் பிரசுரமான கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு இது.**

**அது** 1945 ஆம் ஆண்டின் ஒரு நாள். 12 வயதுச் சிறுவன் ரூபன் ஏர்ல், நியூபவுன்லாந்து றொபேட்ஸ் குடாவில் ஒரு கடையின் காட்சி அறையின் கண்ணாடி மூலம் ஒரு பொருளைப் பார்த்ததும் அவனது இருதயம் வேகமாக அடித்தது. ஆனால், அப்பொருளின் விலையோ 5 டொலர்கள். 5 டொலர்களுடன் அவனுடைய



குடும்பம் ஒரு கிழமை சீவியத்தினை நடத்திவிடலாம். தனது தந்தையாரிடம் அப் பணத்தினைக் கேட்டால் கிடைக்காது. மார்க் ஏர்ல் மீன்பிடியினால் உழைப்பது எல்லாம் அவனுடைய மனைவி டோறா பெற்றுவிடுவாள். அவள் அதனை மிகவும் சிக்கனமாகச் செலவழித்தால் மட்டுமே 5 பிள்ளைகளுக்கும் உணவு கிடைக்கும்.

இருந்தபோதும் ரூபன் அக் கடையின் கதவினைத் திறந்து உள்ளே நுழைகின்றான். வெளிறிய காற்சட்டையுடனும் சட்டையுடனும் நிமிர்ந்த நிலையில் பெருமையுடன் கடை உரிமையாளர் முன் போய் நின்று தான் விலைகொடுத்து வாங்கவுள்ள பொருளைப் பற்றிக் கூறினான். "எனினும் அதற்கான பணம் என்னிடம் இல்லை. அதனைத் தயவுசெய்து எனக்காக ஒதுக்கிவைப்பீர்களா?" "ஆம்" என்றார் கடைக்காரர் சிரித்துக்கொண்டு. ரூபன் நம்பிக்கையுடன் விடைபெற்று வெளியில் வந்து மீண்டும் சூரிய வெளிச்சத்தில் நடந்தான். எப்படியும் அந்த 5 டொலர்களை அவன் பெற்றேயாக வேண்டும்.

திடீரென பக்கவாட்டில் உள்ள தெரு ஒன்றில் இருந்து சம்மட்டிச் சத்தம் கேட்டது. அவனுக்கு ஓர் எண்ணம் உதயமாகிறது. அச் சத்தம் கேட்டவழியிலே நடந்தான். கட்டட வேலை நடந்துகொண்டிருந்த இடத்தினை அடைந்தான். றொபேட்ஸ் குடாவின் வாசிகள் தங்கள் வீடுகளை தாங்களே கட்டுவது வழக்கம். கட்டடத்துக்குத் தேவையான ஆணியினை அவ்வட்டாரத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றிலிருந்து சணல் சாக்குகளில் பொதிசெய்யப்பட்டு பெற்றுக் கொள்வது வழக்கம். அடிக்கடி அச் சாக்குகளை வீசி விடுவதும் உண்டு. அச்சாக்குகள் ஒவ்வொன்றையும் 5 சதத்திற்கு தொழிற்சாலை மீண்டும் விலைகொடுத்து வாங்குவது ரூபன் அறிந்திருந்தான். அவன் அங்கு இரண்டு சாக்குகளைக் கண்டான். அவற்றைக் கொண்டுவந்து தொழிற்சாலையில் பொதிசெய்வதற்குப் பொறுப்பாளரிடம் கொடுத்தான்.

வீடு திரும்பும் பொழுது அவனுடைய இறுக மூடிய உள்ளங்கைக்குள் இரண்டு 5 சதக் குற்றிகள் இருந்தன.

### கூடலூரான்

அவனுடைய குடும்பம் வசித்த வீட்டுக்கு அருகில் ஆடு, கோழி வளர்ப்பதற்கான பழைய கொட்டில் ஒன்று இருந்தது. அங்கு வெறும் தகரடப்பா ஒன்றை ரூபன் கண்டான். அதற்குள் அந்த 5 சதக் குற்றிகள் இட்டு கொட்டில் தரையில் வைத்து வைக்கோலினால் அதனை மூடினான். மாலை உணவு வேளை ரூபன் குசினிக்குள் சென்றான். தந்தை மார்க் மேசையருகில் இருந்து மீன் வலையொன்றைத் தைத்துக் கொண்டிருந்தார். தாய் டோறா சமைத்து முடித்த உணவுடன் ஏற்கனவே காத்துக்கொண்டிருந்தார். ரூபன் தனது அம்மாவைப் பார்த்தான். அவளுடைய நீண்ட வெண்முடி குசினி யன்னலுக்கால் நுழைந்த சூரிய ஒளியில் பளபளத்தது. அவள் மெல்லிய அழகி. குடும்பத்தின் நடுநாயகமாக விளங்குபவள். அவளுடைய வேலைக்கு முடிவே கிடையாது. பிள்ளைகளுக்கான உடைகளை அவளே தைப்பாள். சாப்பாடு சமைப்பாள். பாண் தயாரிப்பாள். மரக்கறித் தோட்டத்தில் வேலை செய்வாள். ஆடுகளில் பால் கறப்பாள், அழுக்குத் துணி துவைப்பாள். எனினும் அவள் சந்தோசமாகவே இருப்



பாள். குடும்பத்தின் நலனே அவளுக்கு எல்லாவற்றிலும் பார்க்க முக்கியம்.

வெற்று ஆணிச் சாக்குகள் தேடி ரூபன் நகரத்தின் மூலைமுடுக்கெல்லாம் சென்றான். பாடசாலை விட்டதன் பின்னர் அம்மா சொல்லும் வேலைகளைச் செய்து முடித்த பின்னர் எப்பொழுதும் அதனைச் செய்தான். இப்படியே கோடை காலமும் இலையுதிர் காலமும் கழிந்து குளிர் காலம் வந்தது. குடாவில் இருந்து குளிர் காற்று வீசியது. இருந்த போதிலும் ரூபன் தனது சணல் சாக்குகளைத் தேடி அலைந்தான். அடிக்கடி நடுங்கினான். களைப்புற்றான். பசியினால் வாடினான். எனினும், கடையின் காட்சி அறையில் உள்ள அந்தப் பொருளைப் பற்றிய நினைப்பு வந்ததும் அவனுக்குப் புதிய பலம் ஏற்படும்.

சில வேளைகளில் அவனுடைய தாய், "ரூபன் நீ எங்கு போயிருந்தாய். நாங்கள் மாலை உணவு அருந்துவதற்கு உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றோம்" என்று கேட்டாள். அதற்கு அவன், "அம்மா நான் விளையாடப் போயிருந்தேன். என்னை மன்னியுங்கள்" - என்பான். டோறா தோளை நிமிர்த்தி தலையை ஆட்டி தனது வியப்பினை வெளிப்படுத்துவாள்.

கடைசியாக ஒளிவிடும் பகலையுடன் மே மாதமும் வந்தது. ரூபனுடைய மனநிலையும் வேகமடைந்தது. எனினும், இன்னும் செல்ல வேண்டிய தூரம் தொலைவிலிருந்தது. அவன் கொட்டிலுக்குள் சென்றான். டின்னைத் திறந்தான். நடுங்கும் கையினால் தகரத்தில் இருந்தவற்றை வெளியே கொட்டி காசை எண்ணினான். நம்பிக்கையில்லாமல் இரண்டாம் முறையும் எண்ணினான். இன்னும் 20 சதம் குறைவாகவே காணப்பட்டது. நகரத்தின் சில பகுதிகளில் இன்னும் சில சாக்குகள் காணப்படக்

(13ஆம் பக்கம் பார்க்க)

| | | | |
|---|---|---|---|
| | சூ. ▲ புதன் | சனி ராகு | |
| வெ. | இராசிச் | | வியா. |
| செ. | சக்கரம் | | சந். |
| | கேது | | |

# இந்த வார இராசி பலன்

## 11-05-2003 - 17-05-2003

### மாற்றம்

11.05.2003 இல் பூரம் - சிங்கத்தில் சந்திரன் நிற்கும். மேடத்தில் - வெள்ளி நிற்கும்.

உலகநாடுகளின் நிர்ப்பந்தம் பேச்சைத் தொடரும்படியான மாற்றங்களை ஏற்படுத்தும். தெற்கு அரசியல்வாதிகள் தடுமாறுவர். இந்தியா, நோர்வே முக்கிய பங்கு எடுக்கும். மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ந்து அழிவுகள் பற்றிய செய்திகள் வரும். விட்டு விட்டுத் தாக்கம் கொடுக்கும். பசுபிக், இந்து சமுத்திர நாடுகளில் இயற்கையின் சீற்றங்களால் அழிவுகள் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

ஆக்கப்பொறுத்தவர்கள் ஆறப்பொறுக்கவேண்டும். உதவிகள் கிடைக்கும். வடுமனை மாற்றம் கொடுக்கும். அடிக்கடி கோபம் வரும். கலகங்கள் வந்து போகும். பொதுத்தொண்டு புகழ்தரும். குடும்பத்தில் பல சிறப்பு மாற்றங்கள் வரும். வீடு, வாகன வசதிகள் வரும். நரம்புப் பலவீனம், காயங்கள், உஷ்ண பீடைகள் கொடுக்கும். மாணவர்களுக்கு சோதனைச் சித்திகள் கிடைக்கும். ஏழரைச்சனிக்கு அர்ச்சனை செய்யவும். பாதுகாப்புத்துறை, நிர்வாகத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### இடபம்

அந்தந்த நாட்டு கடந்தகால தலைவர்கள் விட்ட தவறுகளால்தான் எல்லா நாட்டிலும் பிரச்சினைகள் தலையெடுத்தபடி இருக்கின்றன. உங்கள் தொழில்ஸ்தானததில் முதியோர் விட்ட தவறுகளை திருத்த முற்படுவீர்கள். வருமானத்தில் தாமதம். எதிர்ப்பாலார் உதவி செய்வர். வீட்டில் கலகம். அயலவர்கள் குறை சொல்லுவார்கள். மாமன் வழியினரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் நன்மை அடைவர். வாய்வு வருத்தம் வரும். வியாபாரிகள், குருத்தொழில் புரிவோர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### மிதுனம்

ஓடி ஓடி ஓய்ந்த கட்டைக்கு தடிக்குச்சு என்ன செய்யும் என எண்ணுகின்றீர்களா? விஞ்ஞானமயமாகிவரும் உலகில் ஆத்மீக வழிகொள்பவர்கள் வழிகாட்டிகள் ஆவார்கள். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவர். மன ஆறுதலைத் தரும். புதிய முயற்சிகளை தாமதப்படுத்துங்கள். ஓடியாடித் திரிந்தாலும் காரியங்கள் மந்தம் அடையும். பொருள் இழப்பு, பிரயாணங்களால் ஏமாற்றங்கள் கொடுக்கலாம். சகோதர நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். ஆயினும் உங்களைச் சிலர் குறை சொல்லித்திரிவார்கள். தரகுவேலை, செய்தித் தொடர்பானவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### கடகம்

அரசியலில் திடீர் தெளிவு உடனே வந்துவிடாது. போராடித்தான் அதை அடையவேண்டும். திருமணப் போராட்டம் பொருத்தத்திலும் உறுதியான சோதிடரின் முடிவு இருக்கவேண்டும். அல்லது பலகுழப்பங்களை மக்கள் அடைவர். செவ்வாய்தோஷம், கிரக பாவம், சந்திரனின் ஓட்டம் முக்கியமாகும். உங்கள் தொழில்ஸ்தானத்திலும் உறுதியான முடிவுகள் நன்மை தரும். பண வரவு இருக்கும். காரியங்கள அனுகூலமாகும். பிரயாணங்கள் வெற்றிதரும். வியாபாரிகள், அரசியல்வாதிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### சிங்கம்

தெய்வீகம் மனிதனுக்கு வழிகாட்டும். விதிக்கப்பட்ட கிரகங்கள் அவரவர் பலனை வழி நடத்தும். கஷ்டங்களையும் நன்மைகளையும் அடைந்தே தீருவர். சகோதரர்கள் நன்மை செய்வர். வீடு மனையில் சிறப்பு. குடும்பத்தில் இழுபறி, அபிப்பிராய பேதம் வரும். தாய் வழியினருடன் முறுகல் நிலை வரும். பிரயாணங்கள் நன்மை தரும். தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைத் தரும். உஷ்ண பீடைகள், வயிற்று நோ வரும். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் வரலாம். குருத்துறை , வியாபாரத்துறை, சந்தைத்துறை, தோட்ட வேலை போன்ற துறையினர் பல நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :புதன், வியாழன், சனி.*

### கன்னி

திருமணப் பொருத்தத்தில் ஆண்,பெண் இருவருக்கும் செவ்வாய் தோஷம் உண்டா இல்லையா எனத் தீர்மானிக்கவேண்டியது முதலாவதாகும். உதாரணம் சிங்கத்தில் செவ்வாய் இருந்து வளர்பிறை ஜாதகத்திற்கு மேடத்திலிருந்து வியாழன் பார்த்தால் தோஷம் இல்லை. இதற்கு எவராவது எதிர்ப்பு சொல்ல முடியுமா? ஆனால் சிலர் பிடிவாதம் பிடிக்கின்றார்கள். மேல்லெழுந்த வாரியாகப் பார்ப்பவர்கள் பல தவறுகளை விடுக்கின்றனர். மக்கள் உண்மைகளை தேடுகின்றனர். குடும்பத்தில் அபிப்பிராய பேதம்,வீடு மனையில் மாற்றங்கள் வரலாம். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் புதிய கல்வி நிலை தேடுவர். பிரயாணங்கள் நன்மை தரும். செய்தித்துறை, குருத்துறை சார்ந்தோர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

மூன்று மாதத்தின் பின்பு ஒரு குடும்பத்தில் அடுத்தடுத்த முகூர்த்தங்கள் சகோதரர்களுக்கு வைக்கலாம். அதில் எந்தப் பாதிப்பும் இல்லை. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டம், பொருள் வரவு, பிரயாண வெற்றி, பிடிவாதம் கொடுக்க இடமுண்டு. பொருள் வரவில் ஒரு மந்த நிலை கொடுக்கும். மாணவர்கள் நன்மை அடைவர். பொருள்களில் கவனம். கைமாறலாம். பித்தக்ளகொதிப்பு, தோல் வருத்தம் கொடுக்கும். மாணவர்கள் புதிய புதிய திட்டமிட்டு முன்னேறுவர். குருத்துறை, வியாபாரிகள், தோட்டத்துறையினர்கள் பலமுன்னேற்றங்களை அடைவார் கள்.

*அதிஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

அவரவர் நட்சத்திரத்திற்கு பட்சி, சாஸ்திரப்படி எடுத்து சுபமுகூர்த்தம் வைப்பதுதான் சிறந்த முகூர்த்தமாகும். சிறந்த முகூர்த்தத்தில் எடுத்து சுப கருமங்கள், தொழில் தொடங்குதல், கட்டடம் கட்டுதல் செய்வது சிறந்தது. அட்டமத்துச் சனி 21/2 வருஷம் உங்களுக்கு வருகின்ற தாக்கம் இப்பொழுது உங்களுக்கு. தொழில் மந்தம், இடமாற்றங்கள், பொருள் இழப்பு, மனக் குழப்பங்கள் வரும். எதையும் தாங்கும் இதயத்தை ஏற்படுத்துங்கள். நெஞ்சு, தொண்டை, வயிறு வருத்தங்கள் வரலாம். மாணவர்கள் நன்மை அடைவார்கள். வியாபாரிகள், தோட்டத்துறையினர்கள், இரும்புத்துறையினர்கள், நன்மை அடைவார்கள்.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி.*

### தனுசு

தடுமாறுவது மனிதசுபாவம். யோகங்களில் மரணயோகம் கொடியது. ஆனால் முகூர்த்தம் அககாலத்திலும் எடுக்கும் முறை உண்டு. அவரவர் நட்சத்திரத்துக்கு ஒவ்வொரு நாளும் முகூர்த்தங்கள் உண்டு. அதை அறிந்து செயற்படுவதுதான் சிறந்தமுறையாகும். தொழில்ஸ்தானத்தில் சுபமுகூர்த்தப்படி செயற்பட்டுப் பாருங்கள். வளர்ச்சி, முன்னேற்றம் கிடைக்கும். புதிய ஒழுங்குகளைச் செய்வீர்கள். மாணவர்கள் புதிய கல்விமுறை - புதிய இடங்களை நாடுவார்கள். பிரயா ணங்களை நிதானப்படுத்துங்கள். தூரதேசச் செய்திகள் மன ஆறுதலைக் கொடுக்கும். பாதுகாப்புத்துறை, சந்தைத் துறை, ஹோட்டல்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி.*

### மகரம்

எழுந்தருளிய நேரங்கள், நாள்கள், மாதங்கள் உண்டு. தை, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை போன்ற மாதங்கள் எழுந்தருளிய மாதங்கள். சுபகாரியங்களை செய்து மக்கள் சிறப்படையலாம். தூரதேசச் செய்திகள், பணக்கஷ்டம், இடமாற்றங்கள் என்பன கொடுக்கும். புதிய முயற்சிகள் தொடங்குதல், மனப்பயம் ஏற்படல், நண்பர்களின் உதவிகள், அடிக்கடி உணர்ச்சிவசப்படுதல், கோபம் சர்வசாதாரணமாகும். மாணவர்களுக்கு பெரியவர்கள் உதவுவார்கள். குருத்துறை, சந்தைத்துறை போன்றதுறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.*

### கும்பம்

தெய்வத்தில் - மனிதரில் ஒருவருக்கொருவர் கொண்ட நம்பிக்கைதான் வாழ்வு ஆகும். நம்பிக்கை கெட்டுப்போனால் அலட்சிய மனப்பான்மை அதிகரிக்க இடமுண்டு. தொழில்ஸ்தானத்திலும் நம்பிக்கை பெற்றுச் செயற்படுவீர்கள். சிலர் மறைமுக எதிர்ப்புக்களைத் தெரிவிப்பார்கள் பொறாமையால். எனவே, அவதானமாகச் செயற்படுங்கள்.

## மகாதேவா ஜோதிடம்

தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைத் தரும். புதிய பொறுப்புக்களால் அவதிப்படுவீர்கள். பிரயாணங்களைத் தவிருங்கள். பொருள்செலவு கொடுக்கும். குடும்பத்தில் அபிப்பிராயபேதம் ஏற்படும். குருத்தொழில், சந்தைத் துறை, தோட்டவேலை, அரசியல் துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், சனி.*

### மீனம்

மாத இறுதியில் மாதத் தொடக்கத்தில் சுபமுகூர்த்தம் எடுக்கலாமா எனக் கலங்காதீர்கள். அவரவர் நட்சத்திரத்திற்கு முகூர்த்தம் அக்காலங்களிலும் எடுக்கலாம். பட்சி சாஸ்திரப்படி முகூர்த்தம் சிறந்தது. பதற்ற நிலை, இடமாற்றங்கள், குடும்பத்தில் கருத்து வேற்றுமை, பொருள் நிலை வருதல் என்பனவும் வாய்வு, சளி, கால்வருத்தங்களும் கொடுக்கும். புதிய திட்டங்கள் வெற்றிதரும். புதிய நண்பர் வருதல், புத்திரர் சகோதரர்களிடமிருந்து செய்திகள், உதவிகள் வரும். சந்தைத்துறை, பிரயாணத்துறை, ரீ.வி. வீடியோத்துறையினர்கள் பல நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், சனி.*

★

# மயூரணி படுகொலை வழக்கு விசாரணையில் வெளிவந்துகொண்டிருக்கும் புதிய தகவல்கள்

## சூத்திரதாரி ராக்கம்மாளா? ஹாஜி அலிக்கும் தொடர்பா? விசாரணைகளைப் பொலீஸ் திசைதிருப்பப் பார்க்கிறதா?

சென்னை,மே11

திருமலை மாணவி மயூரணி கொலைச் சம்பவத்தில் புதிது புதிதாகத் தகவல்கள் வெளியாகின்றன. தமிழ்நாட்டில் இறுதியாக அடிபடும் செய்தி, வீட்டில் தங்கியிருந்து கல்வி கற்ற மயூரணி மீது சோலைமலை கண்வைத்திருக்கிறார் என்பதை அறிந்து சோலைமலையின் மனைவி ராக்கம்மாள், பாலபிரசன்னாவின் மூலம் மயூரணியைத் தீர்த்துக் கட்டியிருக்கிறார் என்பதாகும். திகிலூட்டும் இந்தக் கதையை மேலும் கேட்டபோது:-

மயூரணி அறைக்கு சோலைமலைத் தேவர் அடிக்கடி வந்து போனதைப் பார்த்த பிரசன்னா, அதை ராக்கம்மாளிடம் சொல்லியிருக்கிறான். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு அடிக்கடி சண்டை நடந்திருக்கிறது. தனக்கு விசுவாசமாக இருந்த காரணத்தால் பிரசன்னாவிற்கு பண உதவி செய்திருக்கிறார் ராக்கம்மாள். அதே சமயம் தன்னுடைய நடவடிக்கையைக் கண்டுகொள்ளாமலிருக்க சோலைமலையும் அவனுக்கு வாரி இறைத்திருக்கிறார். இப்படி இருபுறமும் பணம் கொட்ட, மதுரையில் பெயர் பெற்ற 'ஸடார் ஹோட்டலுக்கு அடிக்கடி நண்பர்களோடு சென்று ஆடம்பரமாய் செலவழித்திருக்கிறான் பிரசன்னா.

ஒரு கட்டத்தில் மயூரணியை வீட்டைவிட்டே வெளியேற்றும் முடிவுக்கு ராக்கம்மாள் வர மயூரணி போனால் நானும் அவளுடன் வெளியேறுவேன் என்று அடம்பிடித்து இருக்கிறார் சோலைமலை. இதனால் ராக்கம்மா, பாலபிரசன்னாவின் மூலம் மயூரணியின் கதையை முடித்திருக்கிறார். பிறகு நடந்த திருட்டுச் சம்பவமெல்லாம் திட்டமிட்டு நடந்த நாடகம் எனப்படுகிறது.

மயூரணியின் தந்தை தியாகராஜா கூறுகையில்:-

யார் மீதாவது பழி சுமத்தி நான் பாவத்தைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை. சோலைமலையின் மகள் கமலாம்பாளிடம்தான் மயூரணியை ஒப்படைத்திருந்தேன். நடந்ததற்கெல்லாம் அவரே முழுப்பொறுப்பு. சோலைமலையை ஒருமுறைதான் சந்தித்திருக்கிறேன். பாலபிரசன்னா மட்டும்தான் கொலையாளி என்பதை ஏறறுக்கொள்ள முடியவில்லை. அதே வீட்டிலிருந்த சோலைமலையின் மகள் கமலாம்பாள் மற்றும் ஹேமலதாவையும் இந்த வழக்கில் விலக்கிப் பார்க்கமுடியாது. கொலை செய்யும் திட்டம் அவர்களுக்கும் தெரிந்திருக்கலாம். அப்படித் தெரிந்தே கமலாம்பாள் கொழும்பு போயிருக்கலாம். கமலாம்பாளையும் இதில் விசாரிக்க வேண்டும்.

பொலீஸைப் பொறுத்தவரை அவர்கள் ஒரு கோணத்தில் விசாரிக்கிறார்கள். அதில் நான் குறுக்கிடவில்லை. அதேசமயம் சோலைமலைக்கு பொலீஸில் ராஜமரியாதை கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு பிளாஸ்டிக் கப்பில் கோப்பி கொண்டு வந்தால் அவருக்கு எவர் சில்வரில் வருகிறது. காவல் நிலையத்தில் அவர் படுத்துறங்க படுக்கை, தலையணை என்று உபசரிப்பு. குற்றவாளிகள் என்றால் எல்லாரும் ஒன்றுதானே..? என்றார் மயூரணியின் தந்தை.

இதற்கிடையில் தியாகராஜா மதுரை செல்வதற்கு முன்பு தானே கொலையாளி என ஒத்துக்கொள்ளச் சொல்லி அவரது உறவினர் மோகன் தாஸை(மயூரணி முதலில் தங்கிக் கற்ற உறவினர் வீடு) பயங்கரமாக அடித்திருக்கிறது பொலீஸ். இது தெரிந்த தியாகராஜா, மயூரணியை தன் பிள்ளைபோல பார்த்துக்கொண்டவரே அவர்தான். அவருக்கு ஏதேனும் என்றால் நான் என்னையும் மாய்த்துக்கொள்வேன் என்றார். சுதாரித்துக்கொண்ட பொலீஸ், மோகன் தாஸை விடுவித்துவிட்டது.

இதற்கிடையில் இந்தக் கொலை தொடர்பாக முக்கிய பொலீஸ் அதிகாரி ஒருவர், வேறு சில சந்தேகங்களைக் கிளப்புகிறார்.

"சோலைமலைத் தேவரின் வியாபாரத்தில் ஏற்பட்ட தொடர்புகள் மூலமாகக்கூட, இந்தக் கொலை நடந்திருக்கலாம். ஏனென்றால் இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள ஹாஜி அலி, சோலைமலைக்கு இலங்கையிலிருந்து தங்கம் கொண்டுவருவதில் ஒரு காலத்தில் செயற்பட்டவர்தான். இலங்கைத் தொடர்பு என்பதால் இந்தககொலை எந்தப் பின்னணியில் வேண்டுமானாலும் நடந்திருக்கலாம் எனகிறார் அந்தப் பொலீஸ் அதிகாரி.

பாலபிரசன்னா கைதுக்குக் கூட மயூரணியின் சகோதரி சுபந்தினி கொடுத்த தகவல்தான் பொலீஸ்க்கு உதவியிருக்கிறது. அதேவேளை இந்த விசாரணையில் பொலீஸ் அவ்வளவாக தமது மூளையை கசக்கிக்கொள்ளவில்லை என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

(ஐ)

நெஞ்சம் உருகும்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் சங்கரப்பிள்ளை பொன்னம்பலம்

(இளைப்பாறிய இராணுவ அதிகாரி)

அன்னையின் மடியில் 27-10-1932

ஆண்டவன் பாதார விந்தத்தில் 11-04-2003

பாசத்தின் பிறப்பிடமே அப்பா!
பண்பான நிறைகுடமே அப்பா!
பாரினிலே நிறைந்திருந்தாய் அப்பா!
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் ஆசை முகம் காணாது
பரிதவித்துத் தவிக்கின்றோம் அப்பா!
முகுந்த வாசமதில் முழுமதியாய் நிறைந்திருந்தாய்
முகம் அது காணாமல் முடிவிலாத் துயரமானோம்
தூய அன்பு கொண்ட தாய்மையான அப்பாவே!
துடிக்கத் துடிக்க உமை எமனிடம் கொடுத்துவிட்டு
துடிக்கின்றோம் தவிக்கின்றோம் உமைப் பிரிந்து!

இன்று (11-05-2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நுணாவில் மேற்கு.
சாவகச்சேரி.

(17545)

# கியுபிட் போட் KUPID FORT

## (இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை. சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ் காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத்தன்மையைப் போக்க.
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு.
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

## நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணத்தில்:

| | |
|---|---|
| ஜெகன் பார்மஸி | 021-222-3191 |
| சிற்றி மெடிக்கல்ஸ் | 021-222-2198 |
| தங்கவேல் பார்மஸி | 021-222-3367 |

(17406)

# குட்வில் புத்தம் புதிய நான்கு சக்கர உழவு இயந்திரங்கள்

2005, மே மாதம் பெறப்பட்டவை

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் - கிளிநொச்சியிலும்.



* 15 குதிரை வலு, 18 குதிரை வலு, இரட்டை உழவு இயந்திரங்கள்.
* சுழலும் கலப்பைகள்.
* அரிசி ஆலைகள்.

மட்டுப்படுத்தப்பட்ட கையிருப்பு



★மிகுந்த தாமதத்திற்கு இடங்கொடாது இன்றே பதிவு செய்யுங்கள்.

★முதல் பதிபவர் முதலில் பெறும் ஒழுங்கு.

★குழாய் வழியாக உயர்த்தி, சாய்விக்கவல்ல இழுவைப்பெட்டி.

★புத்தம்புதிய 4 சக்கர உழவு வண்டியொன்றின் உரிமையாளர் ஆகுங்கள்.

**AMT போக்குவரவு சேவைகள்,**
**பருத்தித்துறை வீதி,**
**இருபாலை,**
**கோப்பாய்.**
**021 2225184**

உங்கள் உழவு இயந்திரம் மற்றும் விவசாய உபகரணங்களுக்கு இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

உதயன்

# தீர்க்கமான திருப்பங்களுக்கு தயாராகும் அடுத்த பத்துநாள்கள்

இலங்கை அரசியலில் அடுத்துவரும் பத்து நாள்களிலும் தீர்க்கமான நடவடிக்கைகளையும், திருப்பங்களையும் எதிர்பார்க்கலாம் என்ற நிலைமை தோன்றியிருக்கின்றது.

சமாதானப் பேச்சுகளில் பங்குபற்றுவதை இடைநிறுத்தி, டோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் கலந்கொள்ளமாட்டோம் என்று அறிவித்த விடுதலைப் புலிகளை, சமாதானப்படுத்துவதற்காக ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி கிளிநொச்சிக்கு வந்தார். தலைவர் வே.பிரபாகரனையும் புலிகளின் ஏனைய மூத்த தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக புலிகளுக்குள்ள அதிருப்திகள், மனக்குமுறல்களை அவர் அறிந்துகொண்டார். கொழும்பு திரும்பிய அகாஷி, அங்கு இவ்விவகாரம் குறித்து உடனடியாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விவாதித்தார்.

சமாதானப் பேச்சுகளை இடைநிறுத்துவதற்கு புலிகள் தெரிவித்திருக்கும் காரணங்களை கவனத்தில் எடுத்து, அவற்றிற்கு உரிய தீர்வு காண பிரதமர் தரப்பில் - அரசுப் பக்கத்தில் - நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுமா, அந்த நடவடிக்கைகள் என்னென்ன என்பவை குறித்தெல்லாம இவ்வாரத்தில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வகையில், இவ்வாரம் மிக முக்கியமானதாக அமையும் என்று கடந்த புதனன்று கிளிநொச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த சமயம் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கூறியதும் கவனிக்கத்தக்கது.

மறுபுறத்தில் தெற்கில் ஜனாதிபதி குமாரதுங்கவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் சிங்களத் தீவிரப் போக்குடைய ஜே.வி.பியும் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பான தீர்க்கமான அறிவிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை அடுத்து வரும் நாள்களில் எதிர்பார்க்கலாம் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருதரப்புத் தலைவர்களுக்குமிடையில் கடந்த புதன், வியாழக்கிழமைகளில் பல சுற்றுப்பேச்சுகள் நடந்தன. அடுத்த செவ்வாய், புதன்கிழமைகளில் (நாளை மறுதினமும் அடுத்த நாளும்) தொடர்ந்து 'மரதன் சுற்று' பேச்சுகள் நடத்தி, கூட்டமைப்புத் தொடர்பாக இறுதி முடிவுகளை எடுக்க இரு தரப்பினரும் தயாராகிவிட்டதாகவும் தெரிகின்றது.

பேரினவாத ஜே.வி.பியுடன் கூட்டமைப்பது ஓரளவு உறுதியானதும் இதுவரை தமது நிலையை அடக்கி வாசித்த ஜனாதிபதி, இப்போது தனது 'கைவரிசையை' மீண்டும் காட்டத் தொடங்கியிருக்கின்றார்.

கடந்த பொதுத் தேர்தலில் தனது அரசு கவிழ்ந்து, ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றியீட்டியதும் தனது அரசாட்சி அதிகாரப் பொறுப்பை பிரதமர் ரணிலுக்கு விட்டுக் கொடுத்தார் ஜனாதிபதி.

தான் முழு ஜனநாயகவாதி போலவும் ஜனநாயகத் தேர்தலில் ரணில் ஆட்சிபெறும் தகுதியைப் பெற்றிருப்பதால் அரசின் அதிகாரத்தைத் தாம் பின்னடிக்காமல் அவரிடம் பெருமனதுபண்ணி ஒப்படைத்திருப்பது போலவும் காட்டிக்கொண்டார் ஜனாதிபதி.

இப்போது தனது அணி ஜே.வி.பியுடன் கூட்டமைப்பது உறுதியாகும்போல் தென்பட்டதும் ஆட்சி அதிகாரத்தைப் பிடுங்கிக் கொள்வதற்கு முயற்சிக்க ஜனாதிபதி தயாராகிவிட்டார்.

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின்கீழ் இயங்கிவந்த அபிவிருத்தி லொத்தர் சபையை பிரதமருக்கோ, அரசுக்கோ தெரியாமல் - தன்பாட்டில் - பறித்துத் தன்னிடம் எடுத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் முயற்சி இந்த சமிக்ஞையைத்தான் வெளிப்படுத்துகின்றது.

அரசமைக்கும் பொறுப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்ட சமயம் யார் யாருக்கு என்னென்ன அமைச்சுக்களை ஒப்படைப்பது, அமைச்சுக்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் எவை எவை என்பன குறித்தெல்லாம் பிரதமரின் கலந்தாலோசனை இன்றி ஜனாதிபதி தன்னிச்சையாக முடிவெடுக்கமாட்டார் என்ற எழுதாத - கனவான் ஒப்பந்த - இணக்கத்துக்கு ஜனாதிபதியும் பிரதமரும் வந்திருந்தனர்.

அதாவது, பொதுத் தேர்தலில் மக்கள் தெரிவு செய்த பிரதமர் தனது அமைச்சரவையை தனது விருப்பப்படி அமைத்து, அரசைக் கொண்டு நடத்துவதற்கு தாம் ஒத்துழைப்பார் என்ற உறுதிப்பாட்டை ஜனாதிபதி அப்போது வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவரிடமிருந்த பொறுப்பை பிரதமருக்குத் தெரியாமல் இப்போது பறிக்க முற்பட்டிருக்கிறார் ஜனாதிபதி.

அதன் விளைவாக ஜனாதிபதியின் அந்த உத்தரவைத் தாங்கி வெளிவர இருந்த வர்த்தமானியை அச்சிடும் நடவடிக்கை, அரச அச்சகத்தில் இடம்பெற்ற களேபரம், கைகலப்பு காரணமாக நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பேரினவாத ஜே.வி.பியுடன் தனது அணி கூட்டமைப்பதற்கான சூழ்நிலை தோன்றியதும் அதை வைத்துக்கொண்டு ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற எதிர்பார்ப்பில், பிரதமர் ரணிலின் அரசை முடக்கும் முயற்சிக்குத் தயாராகிவிட்டார் ஜனாதிபதி.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடமிருந்து வரக்கூடிய இத்தகைய அச்சுறுத்தலை எப்படி எதிர்கொள்வது, அதை முறியடிக்க எப்படித் தயாராவது என்பன பற்றிய மந்திராலோசனையில் பிரதமர் ரணிலின் தரப்பு நேற்று முற்பகல் மூழ்கியிருந்ததாகத் தகவல்.

எது, எப்படியென்றாலும் பல பக்கங்களிலும் கருக்கட்டியிருக்கும் அரசியல் மேகம் என்ற நெருக்கடி அடுத்துவரும் நாள்களில் நாட்டில் கடும் மழைபோன்ற நடவடிக்கையாகப் பொழியும் என எதிர்பார்க்கலாம்.

# குட்டியப்புலம் கிராமம் மின் ஒளி பெறும்

## ஏற்பாடுகள் துரித கதியில்

வலி.தெற்கு,மே11

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள குட்டியப்புலம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை எக்காலத்திலும் மின்சாரம் வழங்கப்படாதிருந்த மேற்படி கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்க இருப்பதையிட்டு அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழ் கிராமங்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இவ்வருடம் குட்டியப்புலம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து பத்து லட்சம் ரூபா நிதி வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் இத்திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், மேற்படி குட்டியப்புலம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளை இலங்கை மின்சார சபையினர் விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர் என்றும் - கூறப்பட்டது.

(எ-152)

## நாட்டு நடப்பு

### மானமுள்ள மாமனார்

படையினர் பிடித்து வைத்து
பல இன்னல் விழைக்குமாப் போல்
மடமயில் இவளும் அந்த
மாமனை வதைக் கின்றாளே!
கிடந்து நீஉணவு உண்ண
கிடைத்ததிவ் வீடு தானோ?
நடக்கவே முடியா தென்று
நாடகம் நடிக்க வேண்டாம்.
உடனடியாய் 'பென்ஷன்' காசில்
ஊர் அரிசி வாங்கி வாரும்
அட இவள் அதட்டிப்பேச
அஞ்சி யடங்கினார் கணவன் அங்கே
தடதடத்த கிழவன் மெல்ல
'சந்நிதியான்' ஆச்சிரமத்தை நண்ண
இடர்பட்டு வந்தோர்க்கெல்லாம்
இன்புற உணவளித்து காத்தார்.

- விகடகவி.

# சாவல்கட்டில் நீர் வழிந்தோட வடிகால் அமைத்து உதவுக!

## மானிப்பாய் பிரதேச சபையிடம் கோரிக்கை

வலி.தெற்கு,மே11

ஆனைக்கோட்டை சாவல்கட்டு கிராம மக்களின் நன்மை கருதி வெள்ளம் வழிந்தோடக்கூடியதான வடிகால்களை உடன் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) உதவிப் பிரதேச செயலர் சி.செல்வராசா, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையிடமும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள சாவல்கட்டு கிராமம் மிகவும் தாழ்வான நிலப்பரப்பைக் கொண்டது. மழை காலங்களில் இக்கிராமத்தில் தேங்கும் மழை வெள்ளம் வழிந்தோடக்கூடிய வடிகால்கள் எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லை.

கடந்த மாரி காலத்தின்போது இப்பகுதியில் பெய்த மழையினால் பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் பெரும் எண்ணிக்கையான குடும்பத்தினர் வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் தங்கி இருந்தனர்.

எனவே, எதிர்வரும் மாரி காலத்துக்கு முன்னர் இக்கிராமத்திலிருந்து நீர் வழிந்தோடக்கூடிய வடிகால்களை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்று அதில் உள்ளது.

இதற்கிடையில் சாவல்கட்டு கிராமத்தின் நிலையை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (எ-152)

# அந்தணர் அல்லாத இந்து பூசகர்களுக்கு பயிற்சியும், செயன்முறை விளக்கமும்

## கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே11

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அந்தணர் அல்லாத இந்து பூசகர்களுக்கு பயிற்சி நெறியும், செயல்முறை விளக்கமும் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பூசகர்களுக்கு எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஜூன் மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை வரை மட்டக்களப்பு நாவற்குடா இந்துகலாசார மண்டபத்தில் பயிற்சிகள் வழங்கப்படும்.

வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கு ஜூன் மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வவுனியா கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரர் தேவஸ்தானத்தில் பயிற்சிகள் இடம்பெறும்.

மாத்தளை, பொலநறுவை கம்பஹா, கண்டி, பதுளை, களுத்துறை, மாத்தறை, நுவரெலியா, கொழும்பு, இரத்தினபுரி, குருநாகல், புத்தளம், காலி, கேகாலை, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 30ஆம் திகதி திங்கட்கிழமை வரை கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த மூன்று அறிஞர்கள் இந்தப் பயிற்சியை வழங்கவுள்ளனர். மேற்படி பயிற்சியில் பங்கு கொள்ளவுள்ள பூசகர்களுக்கான கடிதங்கள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பங்குபெறும் பூசகர்களுக்கு பயிற்சி முடிவின்போது சான்றிதழ் வழங்கப்படும் - என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ)

# அரசர்கேணி, இத்தாவில் பகுதிகளில் பளைப் பாடசாலைகள் இயங்கும்

## நாளை முதல் ஆரம்பம்

தென்மராட்சி,மே11

பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இயங்கி வந்த கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை நாளை திங்கட்கிழமை தொடக்கம் பளை அரசர்கேணியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக வகுப்பறையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பளை அந்திராயர் தேவாலய வளவில் இயங்கி வந்த வேம்பொடு கேணி சி.சி.த.க பாடசாலையின் ஆரம்பப் பிரிவு நாளை முதல் இத்தாவிலில் மீண்டும் இயங்கவுள்ளது.

இப்பாடசாலையின் மேற்பிரிவு தொடர்ந்தும் பளையில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு பாடசாலைகளின் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், பளை பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி, பளை கோட்டக்கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர்.

(எ-117)

### நாளை

சித்திரை, 19
திங்கட்கிழமை
12.05.2003
திதி : ஏகாதசி
முன்னிரவு 7.08 வரை
நட்சத்திரம் : உத்தரம்
முன்னிரவு 7.57 வரை
சுபநேரம் : 11.54 - 1.24
ராகுகாலம் : 7.24 - 8.54
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நிரம்பியுள்ள கைகளைவிட தூய்மையுள்ள கைகளே இறைவனின் பார்வைக்கு மேலானவையாகும்.

### கரணவாய் பகுதியில் சம்பவம்

# கிறீம்பணிஸ் சாப்பிட்டார் மாணவி; நறுக்கென கடிபட்டன அட்டைகள்!

## வர்த்தகர், பேக்கரி உரிமையாளருக்கு அபராதம்!!

கரவெட்டி,மே11

கிறீம் பணிஸ் வாங்கி ஆசையுடன் சாப்பிட்ட மாணவியின் வாயில் 'நறுக்கென' ஏதோ கடிபடவே எடுத்துப் பார்த்தார். அவிந்த நிலையில் காணப்பட்ட இரு சிவப்பு அட்டைகளைக் கண்டு மாணவி அதிர்ச்சியுற்றார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை கரணவாய், விழுந்தமைப்பிட்டி பகுதியில் இடம்பெற்றது. பணிஸை விற்பனை செய்த வர்த்தகருக்கும் சம்பந்தப்பட்ட பேக்கரி உரிமையாளருக்கும் நேற்று முன்தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் குற்றப்பணம் அறவிடப்பட்டது.

கடந்த புதன்கிழமை பாடசாலை மாணவி ஒருவர் கிறீம் பணிஸ் வாங்கி உண்டுள்ளார். அப்போது வாயில் நறுக்கென்று சத்தத்துடன் ஏதோ கடிபடவே எடுத்துப்பார்த்தார். கடிபட்டுத் துண்டங்களாக வந்தது ஓர் அட்டை. மற்றொன்று அவிந்த நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பாக கரவெட்டிப் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் ம.க.இளங்கோவுக்கு அறிவிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதுகுறித்து விசாரணை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் ஆயிரேம்சங்கர் சம்பவத்துடன் தொடர்புடைய பேக்கரி உரிமையாளருக்கு 2ஆயிரம் ரூபாவும், பணிஸ் விற்பனையாளருக்கு 750ரூபாவும் அபராதமாக விதித்தார்.

சுகாதாரத்தைக் கடுமையாகப் பேணுமாறு அவர்களை நீதிவான் எச்சரித்தார். (எ-9-70)

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அருள்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்) - இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை. (17472)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் பழைய மாணவன்

**கந்தையா ஆறுமுகம்**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்
(17790) யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.

## துயர் பகிர்வு



*பிரபல சமூக சேவையாளரும் பிரசாரகருமாகிய*

ஆறு. திருமுருகனின் தந்தையார்

**கந்தையா ஆறுமுகம்**

அவர்களின் மறைவையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

த.கந்தசாமி
(17752) பென்சன் கவுஸ் ஸ்தாபனத்தார்.

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 05 - 1934



மறைவு 02 - 05 - 2001

சோதிடமணி

**பிரமஸ்ரீ ஸ்கந்த திருஞானசம்பந்தக்குருக்கள்**

திதி: 11.05.2003 (தசமி)

ஆண்டுகள் இரண்டென்ன
ஆயிரம் தான் வந்திடினும்
நீண்ட நம் நினைவுகளில்
நிலைத்திருக்கும் உன் உருவம்

நினைவார்த்த வெளியீடாக வைதிக அபரக்கிரியா பதார்த்த சூசிகா என்ற நூல் (தொகுப்பு:- வைதிக கிரியாரத்னா சோம. வரதராஜசர்மா) அன்றைய தினம் வெளியிடப்படும்

சிவஸ்ரீ
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (17697)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## நெஞ்சோடு சுமக்கும் ஆண்டுகள் 3





| | | |
|---|---|---|
| மாணிக்கப்பிள்ளை குணரத்தினம் (ஊழியர் உணவுக் களஞ்சியம் கல்வியங்காடு யாழ்ப்பாணம்) | | குணரத்தினம் கிறிஸ்ரன்சன் நிரோஜன் (பத்றிக்ஸ் கல்லூரி உயர்தர விஞ்ஞான மாணவன் யாழ்ப்பாணம்) |
| 31-01-1947 | பார்மகிழ | 15-02-1982 |
| 11-05-2000 | பரிதவிக்க | 11-05-2000 |

கனவுகள் பல சுமந்து களிப்போடு வாழ்வோம் என்றிருக்க
கனவுகள் கலையுமுன்னே காற்றோடு கலந்தீரோ!
நாவாக நாமெல்லாம் ஒன்றாகும் நாள் வரையில்
நெஞ்சோடு நாம் சுமந்து நிமலன் பதம் சேர்க்கின்றோம்.

பெரிய விளான்,
திருகோணமலை. (17789)

மனைவி,
பிள்ளைகள்,
குடும்ப உறவினர்கள்.


# NORTH EAST TECHNOLOGIES (NET)

## யாழ்.நகரில் உதயம்!

***NET CAFE*** (24 மணிநேர இன்ரநெற் சேவை) மணித்தியாலத்துக்கு ரூபா 60 மட்டுமே! அங்கத்தவர்களுக்கு சலுகைக் கட்டணங்கள். (விண்ணப்பப் படிவங்களை நிரப்பி அங்கத்துவ அட்டையை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்) **VEDIO CONFERENCE, NET MEETING** மூலம் உலகெங்கிலும் உள்ள உறவினர்களைப் பரஸ்பரம் பார்த்துக்கொண்டே பேச!

நிமிடம் ஒன்றுக்கு ரூபா 10 மட்டுமே! மற்றும் திருமண வைபவங்களை யாழ்.நகரிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஒரே நேரத்தில் கண்டுகளிக்க (அவர்களிடம் கணனியும் Web camera, Inter Net connection உம் இருத்தல் வேண்டும்)

தொடர்பு :
**222 3786**
**0777 - 708498 (HOTLINE)**

NET Working, LAN, WAN, SOHO, Net 2 Phone சகலவிதமான கணனிகளுக்கிடையேயான வலைப்பின்னல் சம்பந்தமான ஆலோசனைகள், சேவைகள தரமான Designகளிற்கும் நாடுங்கள்.

யாழ்நகரில் Caddy Shack கணனிகள் தரமான விலைகளில் குறைந்தளவு கையிருப்பு மட்டுமே உடனடியாக நாடுங்கள்

சகலவித P-I, II, III, IV கணனிகள் விற்பனை, உதிரிப்பாகங்கள் தரமான திருத்த வேலைகளிற்கும்,

Mobile Phones, Nohia, Motorola, Ericsson, Sony Ericsson போன்ற சகல செலூலர் தொலைபேசிகள் விற்பனை, உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள் - Mobile Phone unlocking சேவைகள (lock உடைத்தல்) போன்றவற்றிற்கும்

தொடர்பு கொள்ளுங்கள்:

**பொது முகாமையாளர்,**

**வட கிழக்குத் தொழில்நுட்பம்**

34, சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி-27854)



## குட்டில் உழவு இயந்திரங்கள்

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் - கிளிநொச்சியிலும்.

TV பரிசில்கள் மே 31 வரை மட்டுமே.



மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்:
AMT ட்ரான்ஸ்போட் சேர்விஸஸ்,
பருத்தித்துறை வீதி,
இருபாலை,
கோப்பாய்.
தொலைபேசி: 021 2225784

இப்போதே பதிவு செய்யுங்கள்!

**இறக்குமதியாளர்களும் விநியோகஸ்த்தர்களும்:**

55, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெகிவளை
தொ.பே:818415, 074 - 208101 /2
தொ.மடல்: 818416

# ஆத்திரமூட்டும் விடயங்களைப் பேசித் தீர்த்து முன்னேறும் ரணில் அரசின் புதிய கலாசாரம்

## மனோ கணேசன் எம்.பி. திருப்தி தெரிவிப்பு

ஆத்திரமூட்டும் சம்பவங்களை பேச்சு மூலம் தீர்த்து முன்னேறும் புதிய கலாசாரத்தை ரணிலின் அரசு ஏற்படுத்தி வருகிறது - இப்படிக் கூறியிருக்கிறார் மனோ கணேசன் எம்.பி. அவர் மேலும் கூறியதாவது:-

இந்நாடு சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தமிழ்மக்களின் மீது நடைபெற்றுள்ள ஒடுக்கு முறையின் காரணமாய் உருவாகியுள்ள யதார்த்தத்தையே இன்று இந்நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது.

முதன் முறையாக சுமார் ஒன்றரை வருட காலமாக போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் வடக்கு - கிழக்கிலே இராணுவக் குண்டு வீச்சுக்களும் தெற்கிலே புலிகளின் குண்டு வெடிப்புகளும் நின்றுவிட்டன. கடந்த 25 வருடங்களாக இந்நாடு சந்தித்துவந்த மனித படுகொலைகள் இன்று வரலாறாகிவிட்டன. இதுவே இந்தச் சமாதான முயற்சியின் முதல் வெற்றியாகும்.

எமது சமாதான முயற்சிகளைக் கண்மூடித்தனமாக எதிர்ப்போர்கள் இந்தப் புதிய உண்மைகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். முதலாவது மனிதப் படுகொலைகள் நின்றுபோய்விட்டதால் ஆத்திரமூட்டும் இனவாதச் சூழ்நிலை மறைந்து பேச்சுக்கான அமைதிச்சூழல் ஏற்பட்டுள்ளது. அடுத்தது பேச்சின் ஒவ்வோரு கட்டத்தையும் சர்வதேச சமூகம் உத்தரவாதப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதனால் கடந்த காலங்களைப் போல் எந்தவொரு தரப்பும் எடுக்கப்பட்ட முடிவுகளிலிருந்து பின்வாங்கமுடியாது. அத்தகைய ஒரு தலைப்பட்ச முடிவுகளை எடுக்கும் எந்தவொரு தரப்பும் சர்வதேச சமூகத்தின் எதிர் விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் - என்றார்.(எ)

# புலிகளை வெல்ல முடியாது பேசித் தீர்வைக் காணுங்கள்

## அரசுக்குச் சித்தார்த்தன் ஆலோசனை

இந்த நாடு இன்னுமொரு யுத்தத்தைத் தாங்காது என்பது நிதர்சனமான உண்மை. பிரதமரும் புலிகளும் இதையே வலியுறுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது என்று புளொட் தலைவர் ரி. சித்தார்த்தன் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கிலுள்ள ஏனைய கட்சிகளும் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளிக்கவேண்டும்.

பலம்பொருந்திய நிலையில் இருக்கும் புலிகளை வெல்லமுடியாது. எனவே, பேச்சு மூலம்தான் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் ஒரு தீர்வை முன்வைத்த பெருமை ஜனாதிபதியையே சாரும். எனவே, இந்தப் பேச்சு வெற்றிபெற ஜனாதிபதி உதவ வேண்டும்.

சமஷ்டி அமைப்பை ஏற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டைக் தென் பகுதி சிங்கள மக்களும் கொண்டுள்ளனர் - என்றார். (எ)

# இணைந்த வடக்கு-கிழக்கினுள் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் நம்பிக்கை

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண அமைப்புக்குள்ளேயே எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும். என அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

எமது மக்களின் கோரிக்கைகளை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பது முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்குத் தெரியும். ஜே.வி.பியின் இனவாதத்துக்கு நாங்கள் எதிரானவர்கள். சிவப்புப் போர்வைக்குள் வரும் இனவாதத்தை நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை நாங்கள் கம்யூனிஸ்டுக்களை மதிக்கின்றோம். சமசமாஜக் கட்சியினரை மதிக்கின்றோம். ஆனால், ஜே.வி.பியினரின் இனவாதத்துக்கு நாங்கள் துணை போகத் தயாரில்லை - என்றார்.(எ)

# யுத்தத்துக்குச் செலவழித்த பணத்தை விட பேச்சுக்குச் செலவழிக்கும் பணம் அதிகம்

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு,மே11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டில் இனிமேல் யுத்தம் மீண்டும் ஏற்படாது என்கிறார். அப்படியானால் புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகள் அனைத்தையும் அரசு வழங்கப்போகின்றது என்பதே இக்கூற்றின் உண்மையான அர்த்தமாகும்.

ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

பிரதமர் மீண்டும் யுத்தம் ஏற்படாது என்கிறார். அமைச்சர் ராஜித சேனாரத்ன மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் அதற்கு முகங்கொடுக்க அரசு தயாராக இருக்கிறது என்கிறார். முன்னுக்குப் பின் முரணான பேச்சுகள்.

இலங்கை அரசு உலகிலுள்ள பல நாடுகளுக்கு புலிகளைக் கூட்டிச் சென்று அங்கு பேச்சு நடத்துகின்றது. இதற்கு ஆகும் செலவு இலங்கையின் ஒரு வருட யுத்த செலவுகளுக்கு ஆகும் செலவுகளை விட அதிகமாகும்.

மூதூரில் இடம்பெற்ற சம்பவங்கள் ஓர் இன அழிப்பு நடவடிக்கையாகும். திருகோணமலை மாவட்டத்திலிருந்து முஸ்லிம், சிங்கள மக்களை விரட்டியடிக்கும் படலம் ஆரம்பமாகியிருக்கின்றது.

சேருவில விகாரையிலிருக்கும் விகாராதிபதியைச் சந்தித்த அமைச்சர் ஒருவர் தென்பகுதியில் ஒரு விகாரையைத் தெரிவு செய்து கூறுங்கள், அதைப் பெற்றுத் தருகிறோம் எனத் தெரிவித்துள்ளார். புலிகள் கந்தளாய், சேருவில, 'திருகோணமலை பகுதிகளிலுள்ள சிங்கள மக்களையும் வெளியேற்ற முயற்சிக்கின்றனர்.

இப்போது ஈழம் உருவாகும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (எ)




## வடக்கு-கிழக்கில்

# தமிழை வளர்த்தெடுத்தவர்கள் முஸ்லிம்களே; தமிழர் அல்லர்!

## அமைச்சர் அதாவுல்லா

கொழும்பு,மே11

முஸ்லிம் மக்கள் கிழக்கில் நிம்மதியாக வாழ வேண்டுமானால் கிழக்கு மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் அங்கு தனியான ஓர் ஆளுநர் நியமிக்கப்படவேண்டும். இப்படிக் கூறினார் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானத்துக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். வடக்கு - கிழக்கில் தமிழை வளர்த்தவர்கள் தமிழர்கள் அல்லர்; முஸ்லிம்களே!

இந்த நாட்டில் யுத்தம் நிறுத்தப்படாமல், சமாதானம் ஏற்படாமல் மக்கள் வாழமுடியாது. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களிலும் தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களிலும் தங்கி வாழ்ந்துள்ளார்கள். தமிழ், முஸ்லிம் மக்கள் அங்கு காலங்காலமாக இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் உருவான வடக்கு - கிழக்கு சபையில் உயர் பதவியில் ஒரு முஸ்லிம் இனத்தவர் கூட இல்லை. சமீபத்தில் நியமிக்கப்பட்ட 31 விவசாய நிபுணர்களில் ஒருவர் மாத்திரந்தான் முஸ்லிம் நபராவார்.

இந்த நாடு நிவாரணமும் நஷ்டஈடும் வழங்கியே சீரழிந்து கொண்டிருக்கிறது.

கிழக்கில் இருந்த முஸ்லிம்களைப் பற்றி இச்சபையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் சரி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும்சரி உண்மையைப் பேசவேண்டும் - என்றார். (எ)

## குடாநாட்டை புலிகள் முற்றுகையிட்டபோது

# டில்லியிடம் கையேந்தி நின்றீர்களே! அப்போது இறைமை எங்கே போனது?

## கதிர்காமரின் பேச்சுக்கு சம்பந்தன் பதிலடி

சமாதானப் பேச்சுக்கள் நாட்டின் இறைமைக்கு பேராபத்தை ஏற்படுத்தும் என்று இந்த சபையில் பேசுபவர்கள், யாழ்.குடாநாட்டை புலிகள் முற்றுகையிட்டபோது 35ஆயிரம் படையினரை மீட்டுத் தருமாறு புதுடில்லி சென்று இரந்து நின்றனரே! அப்போது நாட்டின் இறைமை எங்கே போனது?

திருமலை மாவட்ட எம்.பியான இரா.சம்பந்தன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இச்சபையில் இறைமையை பற்றி பேசும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் சகோதரர் சாம் கதிர்காமர சன்சோனி கமிஷன் முன்னிலையில் தமிழ் மக்களுக்கு சார்பாக வாதாடினார். அதை மறக்கமுடியாது. அவரது உரையுடன் லக்ஷ்மன் கதிர்காமர் ஆற்றிய உரையை ஒப்பிட்டுப்பார்த்து ஆச்சரியமடைகின்றேன்.

இலங்கை அரசின் இறைமை குறித்து கதிர்காமர் பெரிதும் கவலை கொண்டார். களங்கப்படாத, களங்கப்பட்டுவிடக்கூடாத ஒன்று என்று விவரித்தார். சிறந்த ஆட்சி, சிறந்த நீதி நிறைந்த செழிப்பு மிக்க நாட்டில் இருக்கும்போதுதான் இறைமை குறித்து பெருமைப்படவேண்டும். சமாதான முயற்சி காரணமாகத்தான் நாட்டின் இறைமைக்கு ஆபத்து வந்துவிட்டதாக அவர் கவலைப்படுவது வேடிக்கையானது - என்றார். (எ)

# புலிகளை யுத்தத்திற்கு இழுத்தவர்கள் இந்நாட்டின் இனவாத வெறியர்களே!

## வேலாயுதம் எம்.பி.

விடுதலைப் புலிகளை யுத்தத்திற்கு இழுத்து வந்தது இந்நாட்டின் இனவெறி பிடித்த தலைவர்களே என்றார் கே.வேலாயுதம் எம்.பி.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

ஐக்கிய தேசிய முன்னணி அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் புதிதாக எதையும் எடுத்து வரவில்லை. ஜனாதிபதி முன்னெடுத்ததை எமது அரசு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றது.

இச்சபையில் இனவாதத்தைக் கக்குபவர்கள் மீண்டும் இந்நாட்டில் யுத்தம் நடைபெறுவதை விரும்புகிறார்கள்.

ஜே.வி.பியினரே இந்நாட்டில் துப்பாக்கிக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியவர்கள். இவர்களது பிள்ளைகள் வடக்கு - கிழக்கில் யுத்த முனையில் போரிடவில்லை. இந்திய வெங்காயத்தைப் பருப்பைக் கொள்வனவு செய்தவர்களும் விற்பனை செய்தவர்களும் கொலை செய்யப்பட்டார்கள். இந்திய அமைதிப் படையைக் குரங்குப் படை என்றவர்கள் இன்று இந்திய உறவை நாடுகிறார்கள்.

ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எமது பிரதமர் உறுதியாகச் செயற்படுகின்றார் - என்றார். (எ)

# ஐ.தே.மு. ஆட்சியில் யுத்தத்தால் ஒரு பொலீஸ்காரரும் இறக்கவில்லை

கடந்த 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதிமுதல் இன்றுவரை வடக்கு - கிழக்கு யுத்தத்தின் காரணமாக ஆயிரத்து 154 பொலீஸார் உயிரிழந்துள்ளனர். 110 பொலீஸார் அங்கவீனர்களாகி உள்ளனர். ஆயினும் ஐ.தே. முன்னணி ஆட்சி ஏற்ற பின்னர் யுத்தம் காரணமாக ஒரு பொலீஸாரும் கொல்லப்படவில்லை என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றம் கூடியபோது கம்பஹா மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எம்.பி. இது குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

1995ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக பொலஸார் எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர். எத்தனை பேர் காணாமற்போயுள்ளனர், அங்கவீனமானோர் எத்தனை பேர் என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க தனது பதிலில் நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி உங்கள் ஆட்சிக் காலத்தில் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்முதல் ஆயிரத்து 154 பொலீஸார் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரை ஆயிரத்து 253 பேருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையவர்களுக்கும் நஷ்ட ஈடுகளை வழங்குவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்டார். (எ)

## ஹிக்கடுவ நகர சபைத் தலைவர் கொலை:

# பதில் தலைவர் சந்தேகத்தின் பேரில் மருத்துவமனையில் வைத்துக் கைது!

ஹிக்கடுவ நகரசபைத் தலைவர் காமினி டிக்சன் பின்னதுவவின் படுகொலை சம்பந்தமாக அச்சபையின் பதில் தலைவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அவர் கராப்பிட்டியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் வைத்தே கைதானார்.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி தனது அலுவலகத்தில் வைத்து நகரசபைத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இக்கொலை தொடர்பாக வாக்குமூலமளிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலீஸார் பதில் தலைவருக்குப் பணிப்புரை விடுத்திருந்தனர். ஆயினும் இருதய நோய்க்கு சிகிச்சை பெறவிருப்பதாகக் கூறி அவர் தனியார் மருத்துமனையில் சேர்ந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# ரத்தோட்டை சமுர்த்தி வங்கியில் கொள்ளை ஊழியர்களின் நகைகளும் அபகரிப்பு

## வெல்லம்பிட்டியில் கொள்ளையடிக்கப்பட்ட வான் கண்டுபிடிப்பு

ரத்தோட்டை, இலுக்கும்புர என்னுமிடத்தில் உள்ள சமுர்த்தி வங்கி நேற்றுமுன்தினம் முற்பகல் ஆயுதம் தரித்த ஒரு குழுவினரால் கொள்ளையடிக்கப்பட்டது.

இக்குழுவில் மூவர் இருந்தனர் எனக் கூறப்படுகிறது. வங்கி ஊழியர்கள் அணிந்திருந்த நகைகளையும் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பது உடனடியாக கணக்கிடப்படவில்லை. ரத்தோட்டை பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, கொலன்னாவ, வெல்லம்பிட்டிய பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட ஒரு வான் மாத்தளை, கைக்காவலப் பகுதியிலிருந்து ரத்தோட்டை பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

வானில் இருந்த மூவர் பொலீஸாரைக் கண்டதும் தப்பியோட முயன்றுள்ளனர். ஆயினும் பொலீஸார் அவர்களைக் கைதுசெய்துள்ளனர். விசாரணைகள் தொடருகின்றன. (எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

தம்பையா குமாரசாமி என்பவரது (IC No.491253720V), சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன 09-05-2003 அன்று யாழ். நகரப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 56/11, பல்கலைக்கழக வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (17793)

57118?56 இலக்கமுடைய புதிய ஹமாஹா (பூண்) துவிச்சக்கர வண்டி ஒன்று யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 26ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.9, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். 0777 6002110 (17800)

வசாவிளான் தெற்கைச் சேர்ந்த தங்கராசா ஜெயராணியின் தேசிய அடையாள அட்டை (இல.676803661V) சாவகச்சேரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க.மகேஸ்வரி, கைதடி நுணாவில் வைரவர் கோவிலடி, சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (17759)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையிலுள்ள கணணி (கொம்பியூட்டர்) றெகுலேற்றருடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 01 386699 (சி-27771)

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட 20 வகையான தையல்களை தைக்கக்கூடிய, மின்சாரத்தில் இயங்கும் தையல் மெசின்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ, தம்பாலை, அச்சுவேலி. T.P.070 212893 (17787)

சொந்தப் பாவனையிலுள்ள கொழும்பு லைன் ஓடக்கூடிய Model Vauette Nissan Van விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.21,கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 0777 245015 (17803)

யாழ்ப்பாணம், முனியப்பர் கோவில் வீதியில் ரீகல் திரையரங்குக்கு அருகில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0838 5595 (C/27831)

சிறிதுகாலம் பாவித்த புதிய E.B.K. 1200 (Honda) ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.ஐங்கரன், 603,K.K.S. றோட், யாழ்ப்பாணம். (17810)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: 1) மான்ஸ் பாடசாலை வீதி, டச்சு றோட், உடுவில். 2)சுன்னாகம் மீன் சந்தை முன்பாக. (17569)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம் பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867 (17750)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic) நிறுவை. (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17609)

## மணமகன் தேவை

றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பம், 30வயது, தாதியாகத் தொழில்செய்யும், அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. வெளிநாட்டில் வசிக்கும் மணமகன் விரும்பத்தக்கது (வேறு சமயத்திற்கு மாறலாம்). வேறு சமயத்தவரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விள.இல.1885, C/o உதயன். (17784)

யாழ்.கௌரவ குடும்பம், றோமன் கத்தோலிக்கம், 29 வயது, அரச வைத்தியசாலையில் தாதியாக இருக்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை. உள்நாட்டில், வெளிநாட்டில் வசிப்போரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விள.இல. 1884, C/o உதயன், யாழ்ப்பாணம். (17783)

## நாய்க்குட்டிகள் விற்பனை

காவலுக்குரிய Dobermann Pincher, Great Dane, Dachund நாய்க்குட்டிகள் 1500/- தொடக்கம் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (17690)

## வாடகைக்குண்டு

பிரதான வீதிக்கு அருகில், பற்றிக்ஸ் வீதியில் தனியார் வெளிநாட்டு நிறுவனங்கள் இயங்கக் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: அ.பற்றிமா, இல.28, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P. No. 222 5957 (17776)

## புலமைப் பரிசில் பரீட்சை - 2003

மேற்படி புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கான 10 மாதிரி வினாத்தாள்களுடன் விடைகளும் உள்ளடக்கியதாக வெளி வந்துள்ளது. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியை: திருமதி இ.ரகுநாதன், சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம். (17763)

## தேவை

வயரிங் செய்வதில் திறமையும் அனுபவமும் உடைய இருவர் தேவை. தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 1878, உதயன், யாழ்ப்பாணம். (17751)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், றக்கா வீதி, ஜோன் பொஸ்கோவிற்கு அருகாக ஆலடிச் சந்தியில் வீடுகள், கடைகள் கட்டக்கூடிய 51/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:

இல.9, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0777 - 118367 (17808)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 02.05.2003 அன்று அகாலமரணமடைந்த ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி
### திலகராஜா ஜெகத்ஜெனனி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கின்ற அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு,
சங்கானை.

சமுர்த்தி முகாமையாளரும்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

(சி-27804)

## கண்ணீர் அஞ்சலி

ஈழத்துச் சிதம்பரம், தினகரன் பிட்டி வைரவர் ஆகிய ஆலயங்களின் தொண்டனாக இருந்து 08-05-2003 அன்று சிவபதமடைந்த

### சிதம்பரப்பிள்ளை தில்லைநாதன் (சாமியார்)

அவர்களின் மறைவினால் துயரத்தில் மூழ்கியிருக்கும் அன்னாரின் உறவுகளுக்கு, எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர். (17817) - திருப்பணிச்சபை.

உ
சிவமயம்

2ஆவது உலக இந்து மாநாடு
அகில இலங்கை
சைவக்குருமார் அர்ச்சகர் சபையின்

## இந்துசமய எழுச்சி விழா

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதின மண்டபம்
காலம்: 12-05-2003 திங்கட்கிழமை மாலை 3.00மணி

### நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை: ஈழ நல்லூர் சிவசுப்பிரமணியம் குழுவினர்

மங்கள விளக்கேற்றல்

வேததோத்திர பாராயணம்: சிவாச்சாரிய மாணவர்கள்
சைவக்குருமார் பயிற்சிக்கல்லூரி

திருமுறை பாராயணம்:
செல்வி பத்மரஜனி பாலசுந்தரக்குருக்கள்
செல்வி மேனகா மகேஸ்வரக்குருக்கள்

புஸ்பாஞ்சலி நடனம்:
செல்வி துவாரகா கிருபாகரக்குருக்கள்
செல்வி பஞ்சுகா கிருபாகரக்குருக்கள்

வரவேற்புரை: சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக்குருக்கள் (செயலாளர்)

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் - நல்லைக்குருமணி

தலைமையுரை:
சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள்- சபைத் தலைவர்

பிரதம விருந்தினர் உரை:
மாண்புமிகு திரு.தி.மகேஸ்வரன்
(அமைச்சர், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு)

சிறப்புரைகள்: சைவசித்தாந்தமும் கிரியையும்
பண்டிதர், சைவசித்தாந்தப் புலவர்
சிவஸ்ரீ ம.ச.வேதாரணியக்குருக்கள்
(போஷகர் மேற்படி சபை)
சிவன் எனும் செம்பொருள்
முதறிஞர், கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)
திருமந்திரமும் கிரியையும்
சிவத்தமிழ் வித்தகர் திரு.சிவ மகாலிங்கம்
(உதவிப் பணிப்பாளர்
இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு)
தமிழகத்திலிருந்து வருகை தருபவர்கள்

நன்றியுரை

### கலை நிகழ்ச்சிகள்

கரகாட்டம்

சிறுவர் நாடகம் மெய்ப்பொருள் காட்டிய பக்தி

பாட்டு செல்வி மேனகா மகேஸ்வரக்குருக்கள்
செல்வி காயத்ரி மகேஸ்வரக்குருக்கள்

பண்ணிசைக் கச்சேரி
இசைக்கலைமாமணி திருமதி பத்மாசினி உபேந்திரன் ஐயா
சங்கீதபூஷணம் திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்
இசைக்கலைமாமணி செல்வி சுதா மகாதேவன் ஐயா

இசைநாடகம்
அரியாலையூர் நடிக கலாமணி செல்வம், கலாபூஷணம் செ.மெற்றாஸ்மயில் மற்றும் மூத்தகலைஞர்கள் இணைந்து பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் வழங்கும்
ஸ்ரீவள்ளி இசை நாடகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தர்மத்தின் வழியில் சமாதானம் காண்போம்.

திருநெல்வேலி. (17816) - அ.இ.சை.கு.அ.சபை.


Direct Start 2003

A/L பரீட்சை எழுதிய மாணவர்க்கான
விசேட பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

Computer Education for Success

Diploma in MS OFFICE — 4 months
Diploma in WEB DESIGN — 3 months
Diploma in DESKTOP PUBLISHING — 3 months
Diploma in COMPUTER PROGRAMMING — 4 months
Diploma in INFORMATION TECHNOLOGY — 5 months
Diploma in COMPUTER STUDIES — 4 months



இலவச கல்வி ஆலோசனைகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும்

இலவச பாடநூல்கள்

எமது அனைத்து பாடநெறிகளும் ICM U.K. London Academy of Computing Electronics உயர்கல்வி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்டவை

ASIAN COMPUTER SYSTEMS
2 G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel : 021-222-5677

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: **2003.05.27 பி.ப. 3.00மணிவரை**

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:

**2003.05.29 ந.ப. 12.00 மணிவரை**

கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி:

**2003.05.29 பி.ப. 2.00 மணி**

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர வைப்புப்பணம் வற் உட்பட |
|---|---|---|
| **புன்னாலைக்கட்டுவன் ஐயனார் கோயில் வீதி திருத்தம்** | **6000.00** | **600.00** |
| **பட்டியோலை வீதி திருத்தம்** | **4000.00** | **480.00** |

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரியகாலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேல்மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2003.05.08.

ந.சிவபாலதருமகுலசிங்கம்,
*செயலாளர்,*
*வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.*

*குறிப்பு:* 2003ஆம் ஆண்டு ஒப்பந்தகாரராகப் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ஒப்பந்தப்பத்திரம் வழங்கப்படும். (சி-27835)

## துணைவி கிராமத்தின் அபிவிருத்தி குறித்து நாளை கலந்துரையாடல்

சங்கரத்தை, துணைவி கிராமத்தின அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை மாலை 3மணிக்கு துணைவி அ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமம் மேற்கு உதவிப் பிரதேச செயலர் க.தர்மராஜா கேட்டுள்ளார்.(எ-160)

## உமாபதி சிவாச்சாரியார் குருபூசை தின நிகழ்வு

அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கம் நடத்தும் உமாபதி சிவாச்சாரியார் சுவாமிகளின் குருபூசை நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 11.30மணியளவில் நீராவியடியிலுள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சைவ சித்தாந்த சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (எ-9)

## இலவச பாடநூல் விநியோகம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு நாளையும், நாளை மறுதினமும் தரம் 5இற்கான கணித பாடநூல் உட்பட இலவச பாடநூல்கள் வழங்கப்படவுள்ளன என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார். (எ-6)

# கண்ணீர் அஞ்சலி

## சின்னத்துரை யோகராசா

*(கிராம உத்தியோகத்தர் ஜே/78 அத்தியடி)*

சாவகச்சேரி, மந்துவிலைப் பிறப்பிடமாகவும் 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட **சின்னத்துரை யோகராசா** அவர்களின் 08-05-2003 ஆம் திகதி மறைவையொட்டி, அன்னாரது குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர், பணியாளர், அங்கத்தவர்,**
**பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**சாவகச்சேரி.**

(17786)

# துயர் பகிர்கின்றோம்

ஆசிரியரும் சமய அன்பருமான திரு. ஆறு.திருமுருகனின் அன்புத் தந்தை

## அமரர் கந்தையா ஆறுமுகம்

அவர்களின் மறைவையொட்டி கலங்கி நிற்கும் குடும்பத்தவருடன் நாமும் துயர் பகிர்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்கு நியந்த்ரீ அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவன்கோயில், நல்லூர்.** (சி-27848) - நியந்த்ரீ.

# கண்ணீர் அஞ்சலி

*மண் மகிழ* 12 - 02 - 1958



*கண் நெகிழ* 08 - 05 - 2003

## அமரர் சின்னத்துரை யோகராஜா

*(சாவகச்சேரி வடக்கு J/303 பிரிவு முன்னாள் கிராம உத்தியோகத்தர்)*

தரமொன்று கிராமசேவை யாளன் ஆனாய்!
தரவிருந்தோம் பாராட்டு நாளும் வைத்தோம்!
வரவிருந்த வாழ்த்தையெல்லாம் உதறி நீத்து
வல்லவனே வானவரின் விருந்தா னாயோ?
உரமிகுந்த உண்மைநிறை ஊரின் தொண்டன்
உறுதியுடன் மக்கள்பணி உவந்து செய்தோன்!
அரனடியை அடைந்தனையோ? அவலம் கொண்டோம்!
அவனடிக்கீழ் நீயமர அஞ்ச லித்தோம்!

அமரரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களை நல்கி அன்னாரின் ஆத்மசாந்திக்கு அஞ்சலிக்கின்றோம்.

**சாவகச்சேரி வடக்கு மக்கள்**
**(J/303 பிரிவு).**

*சாவகச்சேரி.* (17788)


Babi mild
From Nature to your baby
Natural 'N Mild

சருமத்தின் பாதுகாப்பு - கூடத்தில் பரிசீலிக்கப்பட்டது

இயற்கையின் வரப்பிரசாதம்
உங்கள் குழந்தைகளுக்கு



குழந்தைகளின் சருமத்துக்கு மென்மையான பாதுகாப்பைத் தருபவை.

சந்தைப்படுத்துவோர்:
HARCOURTS(PRIVATE)LTD.
No:14, Station Road, Dehiwala.

யாழ்.முகவர்:
JEGHAN PHARMACY
ஜெகன் பார்மஸி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021- 2222194



பெயாரோஸ் சுப மாங்கல்யம்

உங்கள் திருமணச் செலவில் பெரும் பகுதியை நாம் ஏற்போம்..



உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

- மணப்பெண்ணின் புடவை
- தங்கச் சங்கிலி
- பாதணிகள்
- தோழியர் இருவரின் புடவைகள்
- ஆபரணங்கள்
- பாதணிகள்
- முக அலங்காரம்
- தலையலங்கார ஆலோசனைகள்
- மலர் அலங்காரம்
- மணமேடை அலங்காரம்
- மேசை அலங்காரம்
- திருமண கேக்
- திருமண ஸ்ரக்சர் கேக்
- திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
- புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
- 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்

இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.


நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்

உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், த.பெ. 1263, கொழும்பு.
முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.

அழகுக்கலை ஆலோசனைகளை வழங்கும் அனுசரணையாளர்கள்
Salon Nayana

Fair Rose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste



மென்மையான சருமத்திற்கு வெண்மையான முகத்திற்கு

PHOENIX O&M 5147 Licence No. : C/39/2003

# புனரமைக்கப்பட்ட பொது நூலகம் யாழ்.மாநகர சபையிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே11

புனரமைக்கப்பட்ட யாழ்.பொது நூலகத்தை யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் கட்டடத் திணைக்களம் கடந்த 7 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது.

நூலகத்திற்கான உள்ளக வேலைகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் கட்டடத் திணைக்களத்திடமிருந்து தான் நூலகக் கட்டடத்தை தான் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றதாகவும் எனினும், நூலகத்தின் வெளியக வேலைகள் சில தற்போதும் நடைபெற்று வருவதாகவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த 7 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற இக்கையேற்பு வைபவத்தில் யாழ்.மாநகரசபை அதிகாரிகளும் கட்டடத் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ம-8)


'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

## 2ஆவது உலக இந்து மாநாட்டின் எழுச்சி விழா

இடம் : இனுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபம்.

காலம் : இன்று (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணி

தலைவர் : திரு.க.தேவராஜா (தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

நிகழ்வுகள்

ஆசியுரை : அருட்கவி சீ.விநாசித்தம்பி (M.A.)

சிறப்புச் சொற்பொழிவு : தமிழக அறிஞர் இரா.செல்வகணபதி

பரதநாட்டியம் : நாட்டிய கலைமணி செல்வி ஜனித்ரா சோமசூரியசிங்கம்

இசை நாட்டிய நிகழ்வு : A.L. பழனிவேல் குழுவினர் (தமிழகம்)

அமைச்சர் கௌரவிப்பு மற்றும் பல தமிழகக் கலைஞர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(17827)

இனுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில்.
திரு நெறிய தமிழ் மறைக் கழகம்.
யா/இனுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
இனுவில். யா/இனுவில் தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் இராசையா சுப்பிரமணியம்

அன்னை மடியில் 10-06-1901 — ஆண்டவன் அடியில் 11-04-2003

எமது குடும்பத் தலைவரின் பிரிவுத்துயரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டி நேற்று 10.05.2003 வில்லூன்றியிலும் வீட்டுககிருத்தியம் இன்று 11.05.2003 எமது இல்லத்திலும் நடைபெறுகின்றன. அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. வடிவேல்
93/4, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். (17837)

மகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் முன்னாள் தலைவரும்
வளர்மதி நிறைவாழ்வு உதவித்திட்ட தற்போதைய போஷகருமாகிய
திரு.வை.சிவநேசன் அவர்களின் அன்புத் தந்தையார்

### கந்தையா வைத்தியநாதர்

காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ,ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூகநிலையமும்
வளர்மதி நிறைவாழ்வு உதவித் திட்டத்தினரும்.

(C/27869)



## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சைவ சமய அறிஞரும், தொண்டருமான

### கந்தையா ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்கள் இயற்கை எய்தியமையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்கு எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் பலானை
கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

ஆலய பரிபாலன
சபையினர்.

(C/27861)


## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,மே11

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபரான கந்தசாமி ஜெகதீஸ்வரன் மற்றும் நான்காவது சந்தேக நபரான காராளசிங்கம் சிந்துபரன் ஆகிய இருவரையும் தொடர்ந்தும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் நேற்று யாழ். நீதிமன்றில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார். (ம-8)

## அல்லிப்பளை பாடசாலையை மீண்டும் இயக்க ஏற்பாடு

தென்மராட்சி,மே11

கடந்த ஏழு வருடங்களாக மூடப்பட்டிருந்த அல்லிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பாடசாலையை புனரமைத்து இயங்க வைப்பதற்கு பாடசாலைச் சமூகமும், கல்வித் திணைக்களமும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (எ-117)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர் மாநாடு

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆரம்ப கணித மாநாடு எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலைமுதல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வி நிறுவனத்தில் ஆரம்ப கணித செயற்திட்ட வளவாளர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் உள்ள 5கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

## சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்க ஏற்பாடு

சண்டிலிப்பாய்,மே.11

சிறுவர் பாதுகாப்பு நிதியம் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக சுழற்சி முறையில் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சில்லாலை கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு வழங்கிய நிதி மூலம் மேலும்,37 சங்க உறுப்பினர்களுக்கு சுயமுயற்சிக் கடன வழங்குவதற்கு சங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு தலா 5ஆயிரம் ரூபா வீதம் இக்கடனுதவி வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் பி.சூசைப்பிள்ளை தெரிவித்தார். (எ-135)

## பண்டத்தரிப்பு கல்லூரி வீதி மிகவும் மோசமான நிலையில்!

சண்டிலிப்பாய்,மே11

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதி கடந்த 15 வருடங்களாக திருத்தப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

குண்டும் குழியுமாகக் காணப்படும இந்த வீதியூடாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது.

இதற்கிடையில் - இந்த வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபையிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-135)

## மருதங்கேணியில் நடமாடும் மருத்துவசேவை

சண்டிலிப்பாய்,மே.11

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வைத்திய வசதிகள் எதுவுமில்லாத இடங்களில் இலவச நடமாடும் வைத்திய சேவை ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினதும், யாழ்மாவட்ட அரசாங்க அதிபரினதும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வைத்தியசேவை தொடர்ந்து ஆறுமாத காலம் நடைபெறும் என்றும் -

வைத்தியர்கள் எவரும் இல்லாத பகுதிகளான மருதங்கேணி, மாமுனை, கட்டைக்காடு ஆகிய இடங்களில் இந்த வைத்திய சேவை நடத்தப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-135)


நுணாவில் மேற்கு - மணங்குணாய்

## வீரகத்தி விநாயகர் ஆலயம் 2ஆவது உலக இந்து மாநாடு

மேற்படி ஆலயத்தில் 2ஆவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு நந்திக் கொடியேற்றி விசேட பூசைகளும் வழிபாடுகளும் கிராம உத்தியோகத்தர் திரு.வை.துரைசிங்கம் அவர்கள் தலைமையில் நேற்று முற்பகல் 10மணியளவில் நடைபெற்றன.

(17821)

க.சண்முகலிங்கம்
நிர்வாகசபைத் தலைவர்



## பண்டத்தரிப்பு புனித பத்திமா பதியில்... 12ஆம்,13ஆம் திகதி நிகழ்வுக்ள்

12ஆம் திகதி திங்கட்கிழமை நிகழ்வு

செபமாலைப் பேரணி

★ சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் ஆலயத்திலிருந்து மாலை 4.30 மணி (ஆனைக்கோட்டை, மானிப்பாய், யாழ்.மறைக் கோட்டப் பங்கு மக்களும் இணைந்து கொள்ளல்)

★ பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து மாலை 5.00 மணி (சில்லாலை, மாதகல்)

★ விளான் சந்தியிலிருந்து மாலை 5.00 மணி (இளவாலை, மாரீசன்கூடல்)

★ அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து மாலை 5.30 மணி (சுன்னாகம், உரும்பிராய், பருத்தித்துறை மறைக்கோட்ட மக்களும் இணைந்து கொள்ளல்)

13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருவிழா

திருப்பலி நேரங்கள்:

1. நள்ளிரவு 12.00மணி
2. காலை 6.00 மணி
3. காலை 7.30 மணி திருநாள் திருப்பலி
4. மதியம் 12.00 மணி
5. காலை 4.30 மணி

பஸ் சேவைகள்

★ உரும்பிராயிலிருந்து — 12ஆம் திகதி மாலை 4.00 மணி, 13ஆம் திகதி காலை 6.00 மணி.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து — 12ஆம் திகதி மாலை 4.30 மணி, 13ஆம் திகதி காலை 6.00 மணி, 7.00 மணி.

அருட்திரு.
ம.பெ.ஞானரத்தினம்அடிகளார்
பண்டத்தரிப்பு பங்குத் தந்தை.

(சி-27862)



## துயர் பகிர்கின்றோம்



எமது கலாசாலை அதிபர்
திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
அவர்களின் பாசமிகு தந்தையார்

### கந்தையா ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் 08.05.2003 அன்று காலமானதையிட்டு துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(17832)

கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை சமூகம்.


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா இரத்தினசிங்கம்

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா இரத்தினசிங்கம் 09.05.2003 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் கந்தையா (யாழ்.பாய்க்கடை) - காலஞ்சென்ற பாக்கியலட்சுமி (பவளம்) ஆகியோரின் அன்பு மகனும் புஸ்பராணி (ராணி - கனடா) அவர்களின் அன்புக் கணவரும் சிவப்பிரியா, கேமப்பிரியா, தர்மப்பிரியா ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்14.05.2003 புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.

தகவல்:
செ.விநாயகமூர்த்தி
(சகலன்)

(17840)

### திருமதி பொன்னையா நல்லம்மா

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் மணல்தறை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா நல்லம்மா நேற்று(10-05-2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-சின்னப்பிள்ளையின் அன்பு மகளும் அளவெட்டியைச் சேர்ந்த இளையதம்பி - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (மலேசியா) மற்றும் சற்குணசிங்கம் (மலேசியா), புஸ்பராணி (கொழும்பு), பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, புவனேஸ்வரி மற்றும் சிவஞானம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நேசமலர் (மலேசியா), சிவனேஸ்வரி (மலேசியா), சிவானந்தம், இராமநாதன், சச்சிதானந்தம், பூமலர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(12-05-2003) திங்கட்கிழமை 930 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

19,மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

(17834)

# Professional Computer Courses

க.பொ.த.ப. உயர்தர மாணவர்களுக்கு!

நேரடி ஆரம்பம் - 25-05-2003

டிப்ளோமா கற்கை நெறிகள்:
- MICROSOFT OFFICE
- WEB DEVELOPMENT
- DESK TOP PUBLISHING
- HARDWARE ENGINEERING

தனிப்பட்ட கற்கை நெறிகள்:
- PAGE MAKER 7.0
- PHOTO SHOP 7.0
- COREL DRAW 11
- MACROMEDIA FLASH
- MACROMEDIA FIREWORKS
- MACROMEDIA DREAM WEAVER
- INTERNET & E-MAIL

கம்பியூட்டர் விற்பனை - சேவை - திருத்தம்

மேலதிக விவரங்களுக்கு:

Affiliated with IBS
International Business System Overseas (Pvt) Ltd.
No.402/1, Edvardiare Colombo - 3, Sri Lanka.
Tel.: (0094) - (01) 585605, 585631, 585636
Fax: (0094)-(01) 595329 E-Maill. ibs@ga.lk

CATWAS.COM
இல.48, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. (021) 222 3805

(17801)



## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பான்ஸிக் கடைக்கு விற்பனை அனுபவமுள்ள பெண்பிள்ளை ஒருவர் தேவை. நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
சசிரேகா ரேடர்ஸ்
கல்வியங்காடு.

(17811)



## தேவை

'வேப்பம்பூ' உடன் தேவை.

தொடர்பு:
அண்ணா பாம்
இணுவில்.

(C/27856)



## சாரதி தேவை

ஹையஸ் வானுக்கு சாரதி தேவை.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

0776 048851

(17818)



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## மண்டலாபிஷேகப் பூர்த்தியும் கௌரவிப்பு விழாவும்



சிவஸ்ரீ
சிவலோக கிருபாகரக்குருக்கள்

இன்று(11-5-2003) ஞாயிற்றுக்கிழமை மண்டலாபிஷேகப் பூர்த்தியும் கௌரவிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

ஆலய பிரதம குருமார்களான
சிவஸ்ரீ சிவலோக கிருபாகரக்குருக்கள்
சிவஸ்ரீ சிவலோக இராசேந்திரக்குருக்கள்

ஆகியோர்களின் தெய்வீகப்பணிகளைப் பாராட்டுமுகமாக ஆலய முன்றிலில் கௌரவிப்பும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



சிவஸ்ரீ
சிவலோக இராசேந்திரக்குருக்கள்

குறிப்பு:- 2ஆவது இந்து மாநாட்டையொட்டி ஆலயத்தில் விசேட பூசைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(17814)

- விழாக்குழுவினர்.



யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ.து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

இரட்டை மலசலகூடம் அமைத்தல் வேலைக்குரிய கூலிக்கான

## கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கு இரட்டை மலசலகூடம் அமைக்க வேண்டியுள்ளது. மலசலகூடத்திற்கான வரைபடம் மற்றும் அமைப்பு முறைகள் என்பனவற்றை அலுவலகத்தில் பார்வையிடலாம். இதற்கான பொருள்கள் அனைத்தும் வழங்கப்படும் என்ற அடிப்படையில் இதனை அமைத்துத் தருவதற்குரிய கூலிக்கான கேள்வி கோரப்படுகிறது.

கேள்வி சமர்ப்பிப்பவர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் கேள்விப் பத்திரத்தை ரூபா 250/- செலுத்திப் பெற்று இப் பத்திரத்திலேயே சமர்ப்பித்தல் வேண்டும்.

*கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி:*
19-05-2003 பிற்பகல் 3 மணி

*கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி:*
20-05-2003 பிற்பகல் 3 மணி

*கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரமும் திகதியும்*
20-05-2003 பிற்பகல் 4 மணி

கேள்விதாரர்கள் மீளப்பெறக்கூடிய கேள்வி வைப்பாக ரூபா 1000 செலுத்தி பற்றுச்சீட்டின் இலக்கத்தை கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களின் மீது எடுக்கப்படும் முடிவு கேள்விச் சபையினது இறுதி முடிவாகும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர்கள் தமது கடித உறையை அரக்கு முத்திரையிட்டு கேள்விப்பத்திரக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இரட்டை மலசலகூடம் அமைத்தல் வேலைக்குரிய கூலிக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு, *"பொது முகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்"* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கலாம் அல்லது சங்கத்திலிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் இடுதல்வேண்டும். நேரடியாக ஒப்படைத்தல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி-27855)


# விழிநீர் அஞ்சலி

## அமரர்

# ஐயாத்துரை குலசிங்கம்

*(குலம் கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)*



எமது மதிப்புக்குரிய அமரர் குலசிங்கம் ஐயா அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எமக்கு நல்லதோர் வழிகாட்டியாகத் திகழ்ந்து எம்வாழ்வுக்கு வளம் சேர்த்த பெருமகன் இவர். எமது தேவையை உணர்ந்து நல்ல புத்திமதிகள் கூறி குடும்பத்தில் உறவுகளாய் எம்மை வழி நடத்திய வள்ளல் மறைந்தது நமக்குப் பெருங்கவலை. ஊழியர் என்று கருதாது தமது உள்ளன்பைக் காட்டி உத்தமராய் நாம் வாழ வழிகள் பல கூறிய தன்மையை மறக்கமுடியுமா? அவ்வப்போது இனியவார்த்தைகளால் நல்லதைச் செய்யுமாறு சொல்லும் இன்முகத்தை இனி எப்போது காண்போம்? அந்தோ! அந்தக் காலன் இரக்கமற்ற அரக்கன்தானோ? எமது அன்புத் தெய்வத்தின் இன்னுயிரைக் கவர்ந்து சென்றானே! அவர் அன்றாடம் வழிபடும் மாயக் கண்ணனும் தன்னோடு இவரைச் சேர்த்துக் கொண்டான் போலும். என் செய்வோம்? இனி எப்படி வாழ்வோம்?

எமது அன்பு விழிகளால் நீர் சொரிந்து அழுது அரற்றுகின்றோம். அன்னாரின் ஆத்மா ஆண்டவனின் மலர்ப்பாதங்களில் எப்போதும் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06.09.1948 | 07.05.2003 |

குலம்கிறீம் ஹவுஸ்
உங்களை என்றும் மறவாத
ஊழியர்கள்.

மானிப்பாய் - யாழ்ப்பாணம்.

(சி-27857)

## ஸ்ரீ ராஜமாதங்கி குரு பீடம்
## ஸ்ரீ அஸ்வாருட தேவியாகம் பூர்த்தி

குருபீடம் 2ஆவது உலக இந்து மாநாட்டையொட்டி 8,9,10ஆம் திகதிகளில் நடத்திய ஸ்ரீ அஸ்வாருட தேவியாக பூர்த்தி இன்று ஞாயிறு காலை 9 மணியளவில் நல்லை ஆதீன சுவாமிகளின் ஆசியுடன் நிறைவுபெற்று பக்தர்களுக்கு நோய் தீர்க்கும் மூலிகைத் தீர்த்தம், பஸ்பம் வழங்கப்படும்.

பக்தர்கள் கலந்துகொண்டு ஆசி பெற்றுய்வீர்களாக.

671/1, கே.கே.எஸ்.வீதி
பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்.
0777 686527 (17805)

# மரண அறிவித்தல்

## திருமதி
## சந்திரபாலதேவி சிறிபாலகிருஷ்ணன்

(அண்ணாமலை)

யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரபாலதேவி சிறிபாலகிருஷ்ணன் 08.05.2003 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிறிபாலகிருஷ்ணன் (அண்ணாமலை - யாழ்.ப.நோ.கூ. சங்கக்கிளை - 4 இன் தலைவரும் கோம்பையன்மணல் இந்து மயான நிர்வாக சபை உறுப்பினரும்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகம் நடராசா (பவளக்கால்) மற்றும் கனகம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், புங்குடுதீவு)- விசாலாட்சி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகராசா (முன்னாள் பொது முகாமையாளர், இ.மி.ச.), ரங்கநாதன் (U.K., கொழும்பு மாநகரசபை முன்னாள் பொறியியலாளர்), பத்மநாதன் (U.K., முன்னாள் மனோகரா சினிமா நிர்வாக இயக்குநர்), யோகநாதன் (முன்னாள் மனோகரா சினிமா முகாமையாளர்), சிறிபாலச்சந்திரன் (முன்னாள் எழுதுநர் யாழ்.பலநோ.கூ.ச.), சற்குணபாலதேவி (பவளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மாவதி, இராசலட்சுமி, கௌரிஅம்மா, மல்லிகாதேவி, சுப்புலட்சுமி, கனகேஸ்வரி, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி சிவானி விக்னேஸ்வரன் (U.K), சிவசங்கர் (U.K), தாட்சாயினி (2ஆம் வருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), தாரணி (ஆண்டு 11, யா/இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் சிறிய தாயாரும் பிரியா (கனடா), சித்திரா (ஆஸ்திரேலியா), ரவி (ஆஸ்திரேலியா), வசந்தி (U.K), ரஜனி (U.K), ஹேமமாலினி (U.K), ரவிச்சந்திரன் (கனடா), நிர்மலா (கனடா), வக்சலா, ரவீந்திரன் கௌசலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பவளவாசம்'*
*573, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.*
*T.P: 021-2225761*

தகவல்:
ப.ஸ்ரீபாலகிருஷ்ணன்
(அண்ணாமலை - கணவர்)

(17813)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு போட்டிகள்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை தனது எல்லைக்குட்பட்ட மாணவர்களுக்கிடையில் கட்டுரை, பொது அறிவு போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்தப்போட்டிகள் சனசமூக நிலையங்களில் சமாசத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் என நல்லூர் பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார்.

போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது. (எ-49)

## சாவகச்சேரி லயன்ஸ் சிறந்த கழகமாகத் தெரிவு

சாவகச்சேரி லயன்ஸ்கழகம் கடந்த வருட செயற்றிட்டங்களின் பிரகாரம் சர்வதேச லயன்ஸ் கழக 306பீ மாவட்டத்தில் 16 விருதுகளுடன் முதலிடத்தைப் பெற்று சிறந்த லயன்ஸ் கழகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த கழகத்தைச் சேர்ந்த 6 நிர்வாகிகள் சிறந்த சேவையாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த மூன்றாம், நான்காம் திகதிகளில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 25ஆவது வருட வெள்ளிவிழா நிகழ்வில் இப்பரிசில் வழங்கப்பட்டதாக சாவகச்சேரி லயன்ஸ் கழக செயலாளர் லயன் கா.சற்குணதேவன் தெரிவித்தார். (எ-117)


## விற்பனைக்கு

புனித பாத்திமா மாதா பிரார்த்தனைப் புத்தகம், திருமுக தரிசனப் புத்தகம், கத்தோலிக்க பாடல்கள், சஞ்சிகைகள் மொத்தமாவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

இறை இலக்கிய இல்லம்
52, பத்திமாகிரி,
பண்டத்தரிப்பு.
(17799)


## நுணாவில் மேற்கு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம்

## 2ஆவது உலக இந்து மாநாடு - 2003

இந்து மாநாட்டினை முன்னிட்டு 06.05.2003 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இவ்வூர் மக்களின் சிரமதானப் பணிக்கும் அறநெறிப் பாடசாலை மழலைச் செல்வங்களின் பஜனை நிகழ்வுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (17825)

ஆலய பரிபாலன
சபையினர்.

உ
சிவமயம்

## உத்தரக்கிரியை பத்திரிகை

அன்புடையீர்,

சுபானு வருடம் சித்திரை மாதம் (28.04.2003) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் சரோஜா ஆச்சி கந்தப்பச்செட்டியார்

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 13.05.2003 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.க.வைத்திலிங்கம் செட்டியார்,
திரு.க.அசோகன் செட்டியார்,
திரு.க.ரமேஷ் செட்டியார்
(மகன்கள்)

*160, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(வண்ணை சிவன்கோயில்)* (17820)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.ஆறு. திருமுருகன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### கந்தையா ஆறுமுகம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (C/27858)

பணிப்பாளர் சபை
உறுப்பினர்களும்,
சைவச்சிறுவர் இல்லச்
சிறார்களும்.

# கண்ணீர்க் காணிக்கை



குலம் கிறீம் ஹவுஸ் உரிமையாளர்

## ஐயாத்துரை குலசிங்கம்

அவர்கள்

தோற்றம்
06.09.1948

மறைவு
07.05.2003

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாகத் திகழ்ந்து
அமரராகி விட்ட புண்ணிய சீலரே!
புன்சிரிப்புத் தவழும் இன் முகங் கொண்ட - எமது
குலசிங்கப் பெருந்தகையே! குணக்குன்றே!! எங்குற்றீர்?
கலகலப்பான பேச்சும் இனிமையான சுபாவமும்
எம் கண் முன்னே நிழலாடுகின்றதே!
தியாக உள்ளங் கொண்ட தனக்கென வாழாத
பிறர்க்குரியாளனே! நின் பிரிவு தாங்கமுடியவில்லையே!

எங்கள் மதிப்புக்குரிய குலசிங்கம் அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல புளியங்கூடல் மகாமாரி அம்பாளின் பாத கமலங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

*புளியங்கூடல்.* (17819)

நா.சோமசுந்தரம் குடும்பத்தினர்.

# அன்னைக்கு நிகர்....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. அந்த நாள் முடிவதற்குள் அவன் கட்டாயமாக நான்கு சாக்குகள் கண்டேயாக வேண்டும். அவன் தகர டப்பாவினை ஒளித்து வைத்துவிட்டு ஓடினான். அவன் இறுதியாகத் தொழிற்சாலைக்கு வந்தவேளை பொழுது சாய்ந்துவிட்டது. சாக்குகளை பொறுப்பேற்பவன் அப்பொழுது கதவைப் பூட்டிக்கொண்டிருந்தான். "மிஸ்ரர், தயவு செய்து கதவைப் பூட்டாதீர்கள்" - என்றான் ரூபன். அம்மனிதன் திரும்பிப் பார்த்தான் ரூபன் அவனுக்கு முன்னால நடுங்கிக் கொண்டு வியர்த்து விறுவிறுத்து நின்றதைக் கண்டான். "பையனே நாளை காலையில் வா" - என்றான். ஆனால், "தயவு செய்து இச்சாக்குகளை இப்பொழுதே விற்க வேண்டும்" - என்றான் ரூபன். அம்மனிதன் ரூபனுடைய குரலில் இருந்த நடுகத்தை அவதானித்தான். பையனின் கண்களில் நீர் வழிய ஆயத்தமாக இருந்ததையும் கண்டான். அவனுக்கு ஏன் இவ்வளவு அவசரமாகப் பணம் தேவைப்படுகின்றது என அம்மனிதன் கேட்டான். "அது ஒரு இரகசியம்" - என்றான் ரூபன். அம்மனி தன் சாக்குகளைப் பெற்றுக்கொண்டு தனது காற்சட்டைப் பைக்குள் இருந்து நான்கு ஐந்து சதக் குற்றிகளை எடுத்து அவற்றை ரூபனின் கைக்குள் திணித்தான். ரூபன், "மிகவும் நன்றி" என்று முணுமுணுத்துக் கொண்டு மாட்டுத் தொழுவத்தை நோக்கி ஓடினான்.

அங்கு மறைத்து வைத்திருந்த தகர டப்பாவை எடுத்துக்கொண்டு கடையின் காட்சியறைக்குள் ஓடினான். "இந்தாருங்கள் காசு" - என்று குற்றிகளை 'கவுண்டரில்' வைத்தான். கடை உரிமையாளர் ரூபனின் பொக்கிசத்தை எடு... ...க காட்சி அறைக்குச் சென்றார். அதனைத் தாள் ஒன்றில் வைத்து அழகாக மடித்து அதனை ரூபனிடம் கையளித்தார். ரூபன் வீட்டுக்கு ஓடி கதவைச் சடுதியாகத் திறந்து உள்ளுக்குள் ஓடினான். அவனுடைய அம்மா குசினியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். "அம்மா, அம்மா" - என்று கூப்பிட்டு அவளுடைய கையில் பார்சலை வைத்தான். ரூபனின் அம்மா அதனைக் கவனமாகப் பிரித்தாள். அதனில் இருந்து ஒரு நீல ஆபரணப் பெட்டி தோன்றியது. டோறா அதன் மூடியைத் திறந்தாள். கண்ணீர் அவளுடைய கண்ணை மறைத்தது. அதனுள் சிறிய பாதாம் பருப்பு உருவத்தில் தங்க எழுத்துக்களில் "அம்மா" என எழுதப்பட்ட 'மெடல்' ஒன்று இருந்தது.

அந்த நாள் 1946ஆம் ஆண்டின் அன்னையர் தினம்.

இதுவரை காலத்திலும் டோறாவுக்கு இப்படியான பரிசு ஒன்றும் கிடைத்ததில்லை. அவளிடம் ஆபரணமென்றிருந்தது, திருமண நாள் மோதிரம் மட்டுமே. அவள் தனது மகனை பேசாமல் கைகளால் அணைத்துக் கொண்டாள்.

அடுத்த வருடம் மார்க் ஏர்ல் றொரோன்டோவுக்குச் சென்றான். டோறாவும் பிள்ளைகளும் அவர்களை மார்க் அழைத்துக் கொள்ளுவதற்குப் போதுமான பணம் சம்பாதிக்கும் வரை றொபேட் குடாவிலேயே தங்கினர். இரண்டு வருடங்களுக்குப் பின்னர் அக்குடும்பம் மீண்டும் இணைந்தது.

டோறா ஏர்ல் 75ஆவது வயதில் 1983ஆம் ஆண்டு றொரோன்டோவில் இறந்தாள். தன்னுடைய மிகப் பிரியமான பொக்கிஷமான ஆபரணப் பெட்டியினை ரூபனுக்கு ஆஸ்தியாகக் கையளித்தாள். தற்பொழுது ரூபன் 60 வயதுகளின் இறுதியில் இருக்கின்றார். இரண்டு வருடங்களாக இச்சொத்து விற்பனை முகவர் கனடா சமஷ்டி அரசின் ஒன்ராறியோ மாநிலத்தில் வசிக்கின்றார். அவருக்கு இரண்டு மகன்மாரும் ஐந்து பேரப்பிள்ளைகளும் உள்ளனர். திருமணமாகி 47 வருடங்கள் ரூபனுடன் வசிக்கின்ற அவருடைய மனைவி லில்லியன் கூறுகின்றார், "தனது தாய்க்கு அந்த மெடலைப் பரிசளித்த ரூபன் அத்தாய்க்கு பிரியமான இளைஞனாகவே எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறார்".

ரூபன் தனது அம்மாவைப் பற்றி நினைக்கும் பொழுது அவருக்கு கண்ணில் நீர் நிறைந்து விடும். "அவள்தான் உலகத்திலேயே அழகான பெண்" - என்பார்.

(ம)

## தவறிவிட்டது

நேற்றுமுன் தினம் 9-5-2003 வெள்ளிக்கிழமை நல்லூர் ஆலயத்தின் உள்பகுதியில் ஆறுமுகம் சரவணபவன் (யாழ். பல்கலைக் கழகம்) என்பவரது தே. அ. அட்டை, இல. 711391940V, வேலை அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் சிறுதொகைப் பணம் உள்ளடங்கலாக பேர்ஸ் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும், கண்ணன் லொட்ச் (உணவகம்), பரமேஸ்வராச் சந்தி. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(18841)

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் வேளாளர் குடும்பம். வயது 48. 5 அடி 11 அங்குலம் உயரமுள்ள. ஜேர்மனியில் தொழில்புரியும் நிரந்தர பிரஜாவுரிமையுள்ள அழகிய இளமைத் தோற்றமுள்ள மணமகனுக்கு ஏற்ற குடும்பத்தைச் சேர்ந்த 35 வயதுக்குட்பட்ட 5 அடிக்கு மேல் உயரம் கொண்ட படித்த அழகான மணமகள் தேவை. சாதகம், இயலுமானால் படத்துடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
தேவி தொலைத்தொடர்பு சேவை
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(C-27872) T.P.:222 2142

## MATHS CENTRE

M.M.V. ROAD NELLIADY

**O/L DAY CLASS**

பகல் நேர வகுப்புகள் .

திங்கள - சனி a.m 8.00 மணி (பு.நே.)

முக்கிய அலகுகள் ஆரம்பமாகின்றன!

ஆரம்பம்: 12.05.2003 a.m.8.00

(C-27829)

## நாகம்ஸ் சுன்னாகம்



தினமு முதல்
சரத்குமார், கிரண், ரோஜா நடிக்க
அரசு
தினசரி காட்சிகள் : 11.00, 2.30, 7.00 (பு.நேரம்)

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய், மீராஜஸ்மின்



புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30

(C27029)

## நிறைஞ்சனாஸ்

சிவாஜி, பத்மினி நடிக்க
**தில்லானா மோகனாம்பாள்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force ஜக்சன்

## லிபேட்டி



விஜய், ஸ்நேகா நடிக்க
**வசீகரா...**
காட்சி நேரம் :
11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)

## லஷ்சுமி சினிமா

இணுவில்
மாதவன் - ஸ்நேகா
வையாபுரி, மணிவண்ணன், சார்லி, மற்றும் பலர் நடிப்பில்
**என்னவளே**
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே)

## விற்பனைக்கு

சீற், பாலைத்தீராந்தி, நிலை, கதவு, கிறில், யன்னல் கதவுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
3ஆம் குறுக்குத் தெரு,
(மக்கள் வங்கி அருகில்),
யாழ்ப்பாணம்.
T.P: 0777 111084 (17831)

## கணனி பயிற்றுவிப்பாளர் தேவை

MS OFFICE, VISUAL BASIC, COREL DRAW, PAGE MAKER.
போன்றவற்றில் முன்னனுபவம் உள்ள ஆண், பெண் தேவை.
C/o விளம்பர இலக்கம்-1887
உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.
(C/17843)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சந்திரசேகரம் கந்தையா

(கைதடி)

கைதடி தெற்கைச் சேர்ந்த ஆறுமுகம் சந்திரசேகரம் கந்தையா நேற்று (10.05.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் பூமாதேவி (கனடா), சுப்பிரமணியம் (ஜேர்மனி), கமல்நாதன் (கனடா), கமலாதேவி (கனடா), செந்தில்மணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அரசரத்தினம் (கனடா), தர்மினி (ஜேர்மனி), கெங்கேஸ்வரி (கனடா), தர்மகுலசிங்கம் (கனடா), மகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கைதடி தெற்கு,
கைதடி. (17844)
தகவல்,
க.சின்னத்தங்கம் (மனைவி).

## டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா

(யாழ்.போதனா வைத்தியசாலை)

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா நேற்று(10.05.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு. (c/27874)
தகவல்:
சகோதரி

## திருமதி தங்கேஸ்வரி முத்துராஜா

(மலரக்கா)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கேஸ்வரி முத்துராஜா நேற்று (10.05.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி முத்துராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வரட்ணம், திருமதி தங்கலட்சுமி தம்பிஐயா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜமனோகரன் (இந்தியா), தங்கராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), சந்திரகாந்தா (வத்தளை), மல்லிகாதேவி, நிர்மலாதேவி (ஆசிரியை, கலட்டி,மெ.த.க.) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற புஷ்பதேவி, செல்வரட்ணம் (ஓய்வுபெற்ற அதிகாரி, மத்தியவங்கி), காலஞ்சென்ற மகேந்திரநாதன்(ஜெனரல் மோட்டோர்ஸ்), தர்மலிங்கம் (சவூதிஅரேபியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரபாகரன் (சுவிஸ்), முரளீதரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (இந்தியா), காலஞ்சென்ற அகல்யா, சுகன்யா, சோபனா (East - West Marketing pvt. Ltd.), கீத்தா(வர்த்தகத் திணைக்களம்),நிமால் (Hayleys Consumers Products Ltd.), ராதிகா (கனடா), ரமணன்(கனடா), காலஞ்சென்ற மயூரன்,சங்கர்(Tower Telecom),சுதாகர் (மகாராஜா நிறுவனம்), லவன்(பிரான்ஸ்), பிரபாலினி, காலஞ்சென்ற சுகந்தன், ஜயந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(12.05.2003)திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

30,குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
T.P.No.:222 3835 (c/27873)
தகவல்:
ம.சங்கர்(பேரன்)

## 2000 ஆம் ஆண்டு மேடையேறிய நாடகம் மீண்டும் யாழ்.பல்கலைக்கழகத்தில்.....

அப்பாவிக் கிராமம்
பனியும் கூதலால்
படுத்திருந்த போது
சிதைக்கப்பட்ட ஊர்
அந்தக் கிராமத்தின்
குழந்தைகளை
பேய்கள் சப்பியதாக
நட்சத்திரங்கள்
சொல்லி, சொல்லி
வீழ்ந்தன
நிலவந்தக் கிராமத்தில்
இருந்து உயிர்தப்பி
வானத்தில் நின்றது.

காணாமற் போனோர் பற்றிய ஓர் ஆற்றுகை

பல்கலைக்கழக மாணவர்கள் ஆற்றுகை செய்யும்

# அக்கினிப் பெருமூச்சு

நாடகம்



எங்கள் அடிவயிற்றின் நெருப்பாக கனக்கின்ற உணர்வு இந் நாடகம்

பிரவேசம்: 50/-, 30/-

14-05-2003

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறுகிறது....

செயல் திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT

ஊடக அனுசரணை: உதயன்

# அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களை அகற்ற சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை

தென்மராட்சி,மே11

பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தினை அகற்ற சாவகச்சேரி பிரதேச சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைதடி நுணாவில் பகுதியில் அமைக்கப்பட்ட கட்டடத்தையே அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய கட்டடம் அமைக்கவுள்ளோரும், சேதமடைந்த கட்டடங்களை புனரமைக்கவுள்ளோரும் பிரதேச சபையின் அந்தந்த உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி பெறுமாறும் அனுமதி பெறாத கட்டடங்கள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ம-117)

# மத்தாவோடைக் கிராமத்துக்கு பிரதேச சபை நிதியில் மின்சாரம்

அராலி,மே11

புன்னாலைக்கட்டுவன் தெற்கு பகுதியிலுள்ள மத்தாவோடைக் கிராமத்துக்கு வெகுவிரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

வலி. தெற்கு பிரிவில் இதுவரை எப்போதுமே மின்சாரம் வழங்கப்படாதிருந்த கிராமங்களில் மத்தாவோடைக் கிராமமும் ஒன்றாக இருந்து வந்துள்ளது.

இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய நிதியினை வலி. தெற்கு பிரதேச சபையானது விசேட மூலதன நன்கொடை நிதியிலிருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய பூர்வாங்க மதிப்பீட்டு வேலைகளை இலங்கை மின்சார சபையினர் மேற்கொண்டுள்ளதாக வலி.தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் ந.சிவபாலதர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (ம-14)

# மக்கள் வங்கியை தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு,மே.11

மக்கள் வங்கியை தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இம்மாதம் 15ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 14ஆம் திகதி வரை எதிர்ப்பு மாதம் அனுஷ்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வங்கிஊழியர் சங்கத்தின் மக்கள் வங்கிக் கிளை தெரிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் மக்கள் வங்கி ஊழியர்கள் யாவரும் எதிர்ப்பு இலச்சினையை அணிந்து கொண்டு கடமையாற்றுவரெனவும், தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கெதிராக நாடு முழுவதும் சுவரொட்டி இயக்கம் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி சங்கத்தின் தலைவர் ஈ.சோமச்சந்திர தெரிவித்துள்ளார். (ம)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே11

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் 16 வயதுக்குட்பட்டோருக்கான 'அஸ்ரா' வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்).

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி (யாழ். மத்திய கல்லூரி மைதானம்).

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே11

இளையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று கழக மைதானத்தில் நடை பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ முற்பகல் 9.30 மணி - கரவெட்டி ஸ்ரேர்ஸ் வி.க. எதிர் அத்துளு அம்பாள் வி.க.

★ பிற்பகல் 3.30 மணி - அண்ணா சிலையடி இளைஞர் வி.க. எதிர் அல்வாய் நண்பர்கள் வி.க. (ம-5)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துடன், அச்சகமும் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

அச்சகப் பகுதிக்கு செல்லும் பேஸ்லைன் வீதியும் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது,

அச்சகம் மூடப்பட்டதைக் கண்டித்து நூற்றுக்கணக்கான ஊழியர்கள் அச்சகம் முன்பாக பேஸ்லைன் வீதியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ம-3)

## பயிற்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும், பதுங்கிச் சுடும் பயிற்சியை முடித்த 15 பேருக்கும் இந்த வைபவத்தில் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் பதக்கங்களைச் சூட்டினார்.

திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரத்தினசிங்கம், தளபதி ரவி, தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்ட இணைப்பாளர் மாதவராசா ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர். (ம-3-12)

## நம்பியாரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

இரண்டாம் சுற்றுப் பேச்சில் தாய்லாந்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்தான் சதீஷ் நம்பியார் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்துள்ளார். அந்த வகையில் இந்த அறிக்கை நடுநிலைமையாகத்தான் உள்ளது.

மக்கள் நலனில் உள்ள அக்கறையில்தான் தீர்வை எதிர் கொள்ள வேண்டுமே தவிர, எங்களுடைய சுயநலத்திற்காக எதனையும் வலியுறுத்தக்கூடாது. அவர் கூறியது போல் அரச படைகளும், புலிகளும் நம்பிக்கையை வளர்க்கவேண்டும். இதுவே புரிந்துணர்வைப் பலப்படுத்தும் - என்றார் அவர். (ம-12)

# தெல்லிப்பழை பல நோக்கு சங்க ஊழியர்கள் நால்வர் இடைநிறுத்தம்

வலி.வடக்கு,மே11

தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நான்குபேர் அண்மையில் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் இரண்டு கிளைகளில் ஏற்பட்ட சுமார் 4 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருள் குறைவைத் தொடர்ந்தே இந்த ஊழியர்கள் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

சுமார் 3 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட குறைவு காணப்பட்ட கிளையின் முகாமையாளரும் விற்பனையாளரும் மற்றும் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட குறைவு காணப்பட்ட கிளையின் முகாமையாளரும் இருப்பெடுப்பை மேற்கொண்ட லிகிதரும் இடைநிறுத்தப்பட்டவர்கள் ஆவர்.

இருப்பெடுக்கச் சென்ற லிகிதர் இருப்பெடுப்பின்போது பிழையான தகவலை பணிப்பாளர் சபைக்கு கிளை முகாமையாளருக்கு சார்பாக வழங்கியமைக்காக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவை தவிர்ந்து மேலும் இரு வெளிக்கள உத்தியோகத்தர்கள் மீது இச்சம்பவம் தொடர்பாக விளக்கமும் கோரப்பட்டுள்ளது.

## யாகம் பூர்த்தி

2ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டி யாழ். ஸ்ரீராஜமாதாங்கி குருபீடம் நடத்தி வந்த ஸ்ரீஅஸ்வாரூட தேவியாகம் இன்று காலை 9மணிக்கு பூர்த்தியாகின்றது.

அதன்பின் மக்களுக்கு நோய் தீர்க்கும் மூலிகைத் தீர்த்தம் பஸ்பம் வழங்கப்படவிருக்கின்றது. (ம-3)

## ஜனாதிபதியின் தன்னிச்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரமசிங்க தலைமையில் கூட்டப்பட்டது.

ஜனாதிபதி இக்கூட்டத்தில் பங்குபற்றவில்லை. அவர் நுவரெலியாவில் தங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் போக்கை அமைச்சர்கள் கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிட்டனர்.

நாடாளுமன்றத்துக்கு உள்ள அதிகாரங்களுக்கும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களுக்கும் இடையில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் நடவடிக்கையாகவே ஜனாதிபதியின் செயல் அமைகின்றது என்றும் -

இந்த நடவடிக்கையால் நாடு குழப்பமடையும் சந்தர்ப்பம் உள்ளது என்றும் -

சிரேஷ்ட அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

அடுத்தமாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில்கூட எதிர்பார்க்கும் உதவியைப் பெறமுடியாத அபாயநிலை தோன்றும் என்றும் சில அமைச்சர்கள் கருத்து வெளியிட்டனர்.

இனப் பிணக்கு உட்பட நாட்டின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் குழப்பி நாட்டில் அழிவை ஏற்படுத்தி அரசியல் லாபம்பெற முன்னெடுக்கப்படும் நடவடிக்கையே இது எனவும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

சட்டமா அதிபரை நாளை சந்தித்து ஜனாதிபதியின் நடவடிக்கை தொடர்பான சட்டவலு குறித்து அவருடன் கலந்துரையாடுவது என்றும் -

அதன்பின் ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில வழக்குத் தொடர்வது குறித்து ஆராய்வது என்றும் -

அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறியவந்தது.

ஜனாதிபதி, நம்பிக்கை நிதியம் வற்றிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் வருடாந்தம் சுமார் 600 கோடி ரூபா வருமானம் தரும் அபிவிருத்தி லொத்தர் சபையை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதன் வாயிலாக தனது பதவிக்கான செயற்பாடுகளுக்கு மேலதிக நிதிமூலத்தைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயல்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், அபிவிருத்தி லொத்தர் சபையைத் தனியார் மயமாக்க அரசு முடிவு செய்திருப்பதாகவும்-

- அதைத் தடுத்துநிறுத்தவே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்தார் எனவும் -

ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் கருத்துவெளியிட்டன. (உ-3-12)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை குலசிங்கம்

**(உரிமையாளர், குலம் கிறீம் ஹவுஸ், மானிப்பாய், யாழ்ப்பாணம்)**

ஊர்காவற்றுறை, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குலசிங்கம் கடந்த 07.05.03 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவயோகம் தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சுந்தராம்பாள் (பிரான்ஸ்), சறோ (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரராஜா (பிரான்ஸ்), நடனசிகாமணி (ராசா - வவுனியா) மற்றும் மாணிக்கராஜா (ஆஸ்திரேலியா), சிவராஜா (மல்லிகா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம், மானிப்பாய்), மல்லிகாதேவி (மானிப்பாய்), நவரட்ணராஜா (ஆஸ்திரேலியா), நித்தியலக்ஸ்மி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், உதயணன், துவாரகா, ரேகா, துவாரகன், தயாபரி, காயத்திரி, கீதாஞ்சன், பிரியங்கா, விதுசன், முகுந்தராஜா, மோகனராஜா, பிரிதிவராஜா, மைதிலி, தெய்வீகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், மோகனபிரகாஸ், சிவாஜினி, கஸ்தூரி, லக்ஸி, துளசி ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 10.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*ஆலடிச்சந்தி,*
*மானிப்பாய்.*

(C/27850)

தகவல்:
கு.செல்வராணி
(மனைவி).

## அப்புக்குட்டி யோகபாலன்

**(ஓய்வுபெற்ற சாரதி C.T.B.)**

இராமநாதன் வீதி,கலட்டியைச் சேர்ந்த அப்புக்குட்டி யோகபாலன் நேற்று (10.05.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அருள்மாலினி, அருளானந்தம்(ஜேர்மனி), அருளேஸ்வரன், குமரேசன்(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), கருணதாஸ், விஜயராஜா(டோகா), துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குணசேகரம் கௌசி, ஜீவா ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜிதா, வருநிஷா, சக்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.05.2003)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33/4, இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

(17846)

தகவல்:
க.குணசேகரம் (மருமகன்)


மீண்டும் யாழில்
UR 60 (Green)
மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
RAJH BROTHERS
இல.75,மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
(17829)


ENGLISH
SPOKEN AND GRAMMAR
BY:BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்:12.05.2003
திங்கள்,புதன்
காலை 8.30(ப.நே.)
இடம்:கொக்குவில்
(ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)
(17760)

ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்
வணிகக் கல்வி
பகுதிII
A/L-2004
ஆரம்பம்:12.05.2003
Mon. 4 p.m.
A/L-2005
ஆரம்பம்:12.05.2003
Mon. 5 p.m.
BY:திரு.S.பகீசன்
(17725)

மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு

எந்தப்பிரதேசத்திலும் சிக்கல்கள் இல்லாமல் தெளிவான முறையில், உரையாடக் கூடிய முறையில் இணைப்புகள் தரப்படும்.

தொலைபேசிக் கட்டணவிவரம்
இரவு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
I.D.D - ஒரு நிமிடஅழைப்பு 25 ரூபா



பவர் செலுலர்
183, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
வின்சர் தியேட்டர் முன்பாக,
(பிறூஸ்சிறா முதலாம் மாடி)

பவர் செலுலர்
91 1/2, மின்சார நிலைய வீதி , யாழ்ப்பாணம்.
071 - 399220
0777 - 242416

எமது முகவர்கள்:

1. பவர் தொலைத் தொடர்பு நிலையம். நெடுந்தீவு. 071 - 381192, 071 - 381187
2. எஸ்.சிவகுமார் விஜய் வீடியோ சென்ரர் நின்றாம் வட்டாரம், வேரங்காடு, புங்குடுதீவு.
3. குட்டி. சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு. 071 - 399208
4. ஆர்.ஆனந்தன் (பாலசிங்கம்) கலைவாணி வீதி, சித்தங்கேணி. 071 - 297316
5. சுதன் தொலைத் தொடர்பு நிலையம் மிருசுவில்.
6. வ.அரவிந்தன் வாவர்பாடி, சுழிபுரம். 0777 - 550949
7. ஆர்.தயாகரன் நுணாய் வீதி, வட்டுகோட்டை. 0777 - 244524

வேறு பிரதேசங்களிலும் முகவர்கள் தேவை.
(17826)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.